ENNAM

# எண்ணம்

எண் 2
இல 3
1 12 83



போராட்டமே
இலட்சியமா
இலட்சியமே
போராட்டமா
!

Full freedom for the P.L.O. to decide its own future without external interference!



ARAFAT

# ஆசிரியர் கருத்து

ஒடுக்குமுறை சகிக்கவொண்ணாததாகிவிட்டது. பொறுப்பதற்கு நேரமில்லை. இன்று அரசியல் கற்கும் நேரமல்ல. துவக்கை எடுக்கவேண்டிய நேரம். இந்தாபிடி தமிழீழம். ஆள் சேர்ப்பு, காசு சேர்ப்பு, அங்கே பயிற்சி, இங்கே பயிற்சி, லெபனானில் பயிற்சி, சிரியாவில் பயிற்சி, லிபியாவில் பயிற்சி, இந்தியாவில் பயிற்சி என்று பேசித்திரிந்ததில் மன அமைதி கண்டவர்களும், அப்பேற்பட்ட பேச்சுக்களை அப்படியே நம்பிச் செயல்பட்டதால், அப்பப்பா! என் வரலாற்றுக் கடமையைத் தீர்த்து விட்டேன் என்று நிம்மதிப்பெருமூச்சு விட்டவர்களும், நாளை காணப்போவது என்ன. நாளை ஊர்வலத்தை ஆரம்பித்தவுடன், இந்தப் பயிற்சிகளும், ஆள் சேர்ப்புகளும் தமிழ் மக்களைப் பேரழிவிலிருந்து பாதுகாக்கப்போகிறதா என்பதைத் தமிழ் மக்கள் காத்திருந்து காணத்தான் போகிறார்கள். ஒரு தசாப்தத்திற்கு மேல் தமிழர் விடுதலைக் கூட்டணியை நம்பி இன்று ஏமாந்துவிட்டோம் என்று திருதிருவென்று விழிக்கிறார்கள். இந்த "ஆ", "ஓ"- "உவ" தடிபிடிவாதிகளின் இந்தாபிடி தமிழீழக் கூச்சல் தொடங்கி அரைவருடங்களாகின்றன. இவர்கள் அரசியல் கல்வி தேவையில்லைத் துவக்கு, துவக்கு என்று சொல்லத்தொடங்கி ஒரு தசாப்தங்களுக்கு மேலாகின்றன. இவர்கள் ஒரு காலத்தில் சோஷலிசம் வருவதற்கிடையில் தமிழீழம் அழிந்துவிடும். முதலில் தமிழீழம் பின்பு சோஷலிசம் என்றார்கள். இன்று சொல்கிறார்கள் முதலில் துவக்கை எடுப்போம் பிறகு அரசியலைக் கற்போம். இந்த ஆவேசக் கூச்சலையும், புழுகுரைகளையும் அப்படியே நம்பி விடாது, போராட்டத் தயாரிப்புகள் உண்மையிலேயே எந்த மட்டத்திற்கு உள்ளது என்பதைத் துருவித்துருவி ஆராய்ந்து பார்த்தால் இவர்கள் சொல்லும் லெபனான் பயிற்சி, சிரியாப் பயிற்சியெல்லாம் எந்த மட்டத்திற்கு கல்மேல் எழுத்து என்பதைப் புரிந்து கொள்வர்.

லெபனானையும், பெய்ரூற்றையும் செக்கனுக்கொரு புரட்சிப்பாடத்தைப் புகட்டிக்கொண்டிருக்கிறது. இந்த "ஆ", "ஓ". "உவ" தடிபிடிவாதிகளிலும் பார்க்க ஆயிரம் மடங்கு இறுக்கமாக அணிவகுக்கப்பட்டதும், ஆயுதப்பயிற்சி பெற்றதுமான பலஸ்தீன விடுதலை இயக்கம் இன்று எத்தனை பிரச்சனைகளை முகங்கொடுக்கிறது.

இவர்களை தனித்து இவர்களின் பழமையான எதிரியான இஸ்ரேலின் சியோனிஸ்டுகள் மட்டும் கொன்று குவிக்கவில்லை. சமாதானப் படைகள் என்ற பேரில் அமெரிக்க, பிரான்சு, பிரித்தானியத் துருப்புகள் உட்படக் கொன்று குவித்தார்கள். இன்று இவர்களின் நேற்றைய நண்பர்களான சிரியாவின் பாத்திஸ்ட்டுகளும், பலஸ்தீனிய விட்டோடிகளான அபுமூசா- அபுசாலே கும்பலும் அதே கொலைகாரச் செயல்களைச் செய்து, சியோனிஸ்டுகளையும், ஏகாதிபத்தியத்தையும் மகிழ்விக்கின்றன. பாலஸ்தீனர்கள்

ஆயுதம் எடுத்தார்கள், ஸ்தாபனப்பட்டார்கள், சர்வதேச உறவை ஏற்படுத்தினார்கள். பலஸ்தீனம் கிடைக்காதது மாத்திரமல்ல இன்று பாதுகாப்புக்கு ஒதுங்கவும் இடமற்ற நிலையாகிவிட்டது. நமக்காக ஆயுதமெடுத்த பலஸ்தீனியர்களுக்கு, அவர்களது பிரச்சனைக்கு சிரியாவிடமும், சோவியத்யூனியன் அதிகார வர்க்கத்திடமும் தீர்வில்லையென்பதை அளந்துபார்க்கவல்ல அரசியல் ஞானம் போதாது விட்டது. சோவியத்யூனியன் அதிகார வர்க்கம் தொழிலாளிவர்க்கத்திடமுள்ள நம்பிக்கையையும், உலகப் புரட்சிவருமென்ற நம்பிக்கையையும் காலாகாலத்தே கைவிட்டுவிட்டது. அது ஐக்கிய நாடுகள் சபையில் இஸ்ரேலைக் காப்பாற்றும் அரசியற் தாதியாக செயற்படுகிறதேயொழிய, இனவாத அரசாங்கத்தைத் தூக்கியெறிந்து அராபியர்களும், யூதர்களும் இணைந்து வாழும் சோசலிச அரபுக்குடியரசை கொண்டுவரச் சொல்லும் துணிவற்றதாகும். சிரியமுதலாளித்துவத் தேசியவாதிகள் பிற்போக்குத்தனமும், பிற்போக்குத்தனமும் சேர்ந்த சாம்பார் கலவையாகும். இவர்கள் இஸ்ரேலின் இனவாத அரசாங்கத்தையும் ஏகாதிபத்தியத்தையும் வெறுக்கும் அதேவேளையில் யூத அராபிய பாட்டாளிவர்க்கம் இணைந்து தேசவிடுதலைக்காகவும் சோஷலிசப்புரட்சிக்காகவும் பொதுவாகப் போராடும் முன்னோக்கைக் கேட்டமாத்திரத்தே பீதிகொள்கிறார்கள். "பாத்" கட்சியானது அராபிய-யூதர்கள், சியோனிசத்தற்கு எதிராக இணைவதை நிராகரிப்பதோடு, எல்லா யூதர்களையும் சியோனிஸ்ட்டுகளாகவே காண்கிறது. முதலாளித்துவ நெருக்கடியானது அதலபாதாளத்தை அணுகிக்கொண்டிருக்கும் வேளையில், அரசியல் வியாகூலத்தால் நேற்றைய நண்பர்கள் நாளைய எதிரிகள் ஆகிவிடுவார்கள் என்பதைத் தமிழீழ விடுதலைப் போராளிகள் அறிந்துகொள்ள வேண்டும். ஒரு நெருக்கடி இயக்கத்துள் ஆயிரம்பேரை இழுத்துக்கொண்டுவரும். அடுத்த நெருக்கடி அவ்வியக்கத்தை ஆயிரத்தொரு திவலைக் குழுக்களாக்கிவிடும். அரசியல் கற்கும் நேரமில்லை, துவக்கெடுக்கும் நேரம் என்று புலம்புபவர்கள் தமிழ் மக்களைக் காப்பவர்கள் என்று தகட்டுமேனியிற் தோன்றினாலும் அவர்களே தமிழ் மக்களைக் கருவறுப்பவர்களாகும். ருசியாவில் உள்நாட்டு யுத்தம் நடந்துகொண்டிருக்கும் பொழுது

தான் லெனின் இயங்கியற் சடவாதத் தத்துவப் புத்தகத்தை எழுதிக்கொண்டிருந்தார். அதுவே போல்சவிசத்தை திரட்டி எஃகு ஆக்கியது. இன்று உள்முரண்பாட்டால் திவலை திவலையாகிக் கொண்டிருக்கும் தமிழ் விடுதலை இயக்கங்களின் உள்ளே அடங்கியிருக்கும் சூக்குமம் இதுதான். அரசியல் அறிகையையும் தத்துவத்தையும் தன்னகத்தே செழிக்க வைத்திருக்கும் ஓர் இயக்கம் வரலாற்று நெருக்கடிகளால் பிரமாண்ட ரூபத்தை எடுப்பதும், அரசியல்ஞானமும் தத்துவச் செழுமையும் அற்ற இராட்சத இயக்கங்கள் சுக்கு நூறாகிவிட்டதும் மீண்டும் மீண்டும் சரித்திரம் கற்பித்துத்தந்த பாடம். இதைத் தமிழீழ விடுதலைப் போராளிகள் இன்று தேராதுவிடில், இன்றைய பாலஸ்தீனர்களைப் போல குதலைமொழி பேசும் குழந்தையையும், கொலைக்கருவியையும் ஒருங்கே அரவணைத்து வாழும் நிலையே கிட்டும்.

# 300,000 போராளிகள் வியூகம்

நிக்கராகுவாவில் 300,000 சான்டினிஸ்ட் போராளிகள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பை தோற்கடிக்க அணிவகுக்கப்பட்டுள்ளனர். பாதுகாப்பு மந்திரி ஹம்பேட்ரோ ஓட்டேகாவின் தலைமையிலேயே இப்பாதுகாப்புப்படைகள் அணிவகுக்கப்பட்டுள்ளன. அடுத்த மணி நேரத்திலும் அமெரிக்க ஆக்கிரமிப்பு நிகழலாம் என்ற வானொலி எச்சரிக்கை விட்டது தான் நாம நம் பாதுகாப்பு அகழிகளின் துவாரங்கள் எல்லாம் திறக்கப்பட்டு ஆயத்தமாக்கப்பட்டன.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின், கொன்றாஸ் குழுப்புகளின் ஆக்கிரமிப்புத் தயாரிப்பினாலேயே நிக்கராகுவாப் புரட்சி வலுவடைந்துள்ளது.

# தோட்டத்தொழிலாளர்

இந்த சகாப்தத்தில் பலஸ்தீனர்களுக்கும், செவ்இந்தியர்களுக்கும் அடுத்ததாகக் கடுமையாக ஒதுக்கப்பட்ட மக்கள் மத்திய இலங்கையில் வாழும் தோட்டத்தமிழர்களாகும். பெருமைக்கும் கௌரவத்திற்குமுரிய நாமத்தோடு அழைப்பதெனின் தோட்டத்தொழிலாளர்களாகும். செவ்விந்தியர்களோடும், பாலஸ்தீனர்களோடும் ஒப்பிடுமிடத்து இவர்கள் பிறிதோர் வரலாற்றுத் தனியம்சம்கொண்டவர்கள். செவ்விந்தியர்கள் காலனித்துவம் பிடிக்கும் முதற்கட்ட காலத்தில் அணிவகுக்கப்படாத அனாகிஸ்டுக்களாகக் கிளர்ந்தெழுந்து கடைசி மட்டும் போராடி மாண்டனர். பலஸ்தீனர்கள் தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர பாத்திரத்தை காலாகாலத்தே இனம் காணாமல் ஆனால் அணிவகுத்தலில் இராணுவ ஒழுங்குமுறையையும் விஞ்ச வல்ல விதத்தில் அணிவகுக்கப்பட்டு மத்திய கிழக்கில் புதிய புறநானூறு படைக்கிறார்கள். தோட்டத்தொழிலாளர்கள் செவ்விந்தியர்களைப் போல அணிவகுக்கப்படாத அனாக்கிஸ்ட்டுகளுக்கும் இராணுவரீதியில் அணிவகுக்கப்பட்ட பாலஸ்தீனர்களுக்கும் இடைநடுவுத்தன்மையோடு ஒரு வர்க்கமாக அதுவும் தொழிலாள வர்க்கமாக ஏறத்தாழ ஒரு நூற்றாண்டாக தொழிற்சங்கரீதியில் அணிவகுக்கப்பட்டு, பூண்டோடு அழியாமலும், புறமுதுகு காட்டாமலும் கோவிந்தன் போன்ற சிலநூறு பேரை மட்டும் இரைகொடுத்தும், சில ஆயிரம் பேரைமட்டும் சிறைக்கனுப்பியும் ஏறத்தாழ எல்லோரது பிரஜா உரிமை இழக்கும் வரையிலும் போராடியவர்களாகும். இவர்கள் நடாத்திய தொழிற்சங்கப் போராட்டம் சாட்டிஸ்ற் இயக்கம் தொடக்கம் I.G. METAL தொழிற்சங்கம் வரை கண்டதில்லை. இவர்கள் கங்காணியை மாற்றுவது தொடக்கம் பிரதமமந்திரியை மாற்றுவது வரை போராடியவர்களாகும்

வேலை இழப்புத் தொடக்கம் நாடு கடத்தும் வரை போராடியவர்களாகும். வேலை நிறுத்தங்களை கடமைக்கு பயந்து நடாத்தியவர்கள் அல்லர். வேலைநிறுத்தப் போராட்ட காலங்களில் இவர்களது லயன்களில் நடக்கும் மேள, தாள கும்மாளங்கள் தொடக்கம், றேடியோ விற்று, ஆடு, மாடு விற்று கோழி தங்க விற்று, கட்டிய புடைவைகள் விற்று ஈற்றில் சாமிப்படங்களும் பானையும் விற்றும், தமது தொடர்ந்த போராட்டங்களை விட்டது கிடையாது.

இந்தத் தோட்டத்தொழிலாளர்களது பிரச்சனையை தமிழீழப்பிரிவினைக் கோரிக்கைக்கு மத்தியில் வைத்துத் தீர்ப்பதற்குப் பல்வேறு தமிழீழ விடுதலை இயக்கங்களும் வெவ்வேறு வேலைத்திட்டங்களை முன்வைத்துள்ளன. அதில் புலி இயக்கம், தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம், போன்றவை அமையப்போகும் தமிழீழத்தில் தோட்டத்தொழிலாளர்கள் தங்களது பாரம்பரிய தேயிலை, றப்பர், தோட்டங்களை விட்டுவிட்டு தமிழீழத்தின் எல்லைப்பகுதிகளில் தரிசாக இருக்கும் நிலங்களிற் குடியேற வேண்டும் என்ற ரீதியிலும், E.P.R.L.F , EROS போன்ற இயக்கங்கள் அமையப்போகும் தமிழீழத்தின் எல்லைக்குள் பதுளை, பண்டாரவளை போன்ற பிரதேசங்களையும் உள்ளடக்கிக் கொண்டால், தோட்டத் தொழிலாளர்கள் மற்றைய தோட்டங்களையும் விட்டுவிட்டு வந்து பதுளை பண்டாரவளை போன்ற தோட்டங்களிற் குடியேறலாம் எனவும் பிரேரித்துள்ளனர்.

நாம் நினைப்பதுபோல, ஆசைப்பட்டதுபோல இலங்கைச்சரித்திரம் மாறியிருந்தால் தமிழர்களது பிரச்சனை எப்போதோ தீர்ந்திருக்கும். வரலாறு நினைத்தபடி தான் மனிதர்கள் மாறுவார்களேயொழிய மனிதர்கள் நினைத்தபடி வரலாறு மாறிவிடுவதில்லை. நாலைந்து வருட-

-ங்கள் பின்னுக்குத் திரும்பிப் போய் இந்த இயக்கங்கள் கூறியவற்றையும் எதிர்பார்த்தவற்றையும் சிறிது ஆராய்ந்-தால் நாம் கூறுவது நிரூபணமாகிவிடும்.

தோட்டத்தொழிலாளர்கள் எவ்வாறு எந்த-சமூக வரலாற்றுக் காரணிகளாலும், அரசியல் பின்னணிகளி-னாலும் இந்நிலைக்கு ஆளானார்கள் என்பதை ஆராய்ந்தால், அதன் எதிர்மறுப்பே (NEGATION OF NEGATION) இவர்களது பிரச்சனைக்குத் தீர்வாகிவிடுமேயொழிய, கற்பகதருவின் கீழ் நின்று காராம்பசு பரிசாகக் கிடைக்கும் என்று கனவு காண்பதால் தோட்டத்தொழிலாளரது பிரச்சனையும் தீர்ந்துவிடாது. ஈழத்தமிழரது பிரச்சனையும் தீர்ந்துவிடாது.

தோட்டத்தொழிலாளர்களது பிரச்சனையை வரலா-ற்றின் நிகழ்வுப் போக்கின்படி சிறிது தேர்ந்து கொண்டால் பிரச்சனையின் ஆணிவேரை அசைக்கக் கூடியதாக இருக்கும். இலங்கைத் தோட்டத்தொழிலாளர்கள் எவ்வாறு எதற்காக இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்டா-ர்கள் என்பதைச் சிறிது ஆராய்ந்தால், சர்வதேசமுதலா-ளித்துவம் பூகோளம் முழுவதிலுமுள்ள இயற்கையோடியை-ந்த பொருளாதார உற்பத்தி முறையைச் சீரழித்ததாகும். இந்தியாவின் ஆதிபொருளாதார அமைப்புகளெல்லாம் கிராமந் தோறுமுள்ள பொதுவுடமை அமைப்புகளால் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகப் பாதுகாக்கப்பட்டுவந்தன. இந்த நீண்ட காலங்-களில் அரசியல் குழப்பங்களும், அமைதியின்மையும் நிலவிய-பொழுதும் இந்தப் பொதுவுடமை விவசாய அமைப்பு முறை-கள் சிதைந்து போகவில்லை. கி.மு. ஆறாம் நூற்றாண்டு பார-சீகர் இந்துசமவெளியை ஆக்கிரமித்தனர். அதற்கு இரண்-டு நூற்றாண்டுகள் பின்பு அலெக்சாந்தர் தலைமையில் கிரே-க்கர்கள் நுழைந்து காலனிகள் அமைத்தார்கள். இவர்களது முற்றிலும் புறம்பான நாகரீகத்தாலும், பண்பாட்டாலும் கூட இந்திய பொதுவுடமை விவசாய அமைப்பு முறை ஆட்

டங்காணவில்லை. பின்பு சித்தியர்கள் இந்தியாவை ஆக்கிரமித்து இந்தியா பலநூற்றாண்டுகள் அராபியரின் ஆட்சியில் இருந்து வந்தது. பின்பு ஆப்கானிஸ்தானியர்கள் ஆக்கிரமித்தனர். பின்பு மங்கோலியர்கள் அமைதியான இந்தியக்கிராமங்களை ஆக்கிரமித்து அந்தள்ளநெல் வயல்களையெல்லாம் இரத்தத்தில் தோய்த்தார்கள். இருந்தபோதும் இந்தியாவின் கிராமசமுதாய அமைப்பு முறையானது தப்பிப்பிழைத்தது. எந்த வெற்றிவாகை சூடிய முகமதிய ஆட்சியாளர்களும் விவசாயிகளின் உள்நாட்டு சமூக அமைப்பு முறைகளைச் சீர்குலைக்கவில்லை. அவர்கள் — தங்களது அதிபதிகளை, அதிகாரிகளை அமைத்து வரிவசூலித்ததும் சுரண்டியதையும் தவிர மக்களின் உற்பத்தி சாதனங்களைச் சூறையாடவில்லை. அவர்களது சமூக அமைப்புகளை நிர்மூலமாக்கவில்லை. முகலாய சாம்ராச்சியத்தின் போது விவசாயிகள் தங்களது இறைவரியை மாத்திரம் செலுத்திவிட்டு அமைதியானமுறையில் வாழ்ந்தார்கள். பின்பு பிரித்தானியர்கள் வந்தார்கள். முதலாளித்துவ-நாகரீகமானது மக்களின் சமூக அமைப்பு முறைகளை சீர்குலைத்தது. ஆயிரம் வருடகால வாள்முனைகள் செய்யாதவைகளை, முதலாளித்துவம் சொற்பகாலத்தில் சாதித்து விட்டது. ஈற்றில் பிரித்தானிய மூலதனம் கடைசித் தேவையான இந்திய சமூகத்தின் உயிர்வாழ் சாதனத்தைத் தனதாக்கி கொண்டது. என்ன அது? <u>நிலம்</u>

முதலாளித்துவம் பிறந்து வரலாற்று ரீதியாக வளரும் பொழுது முதலாளித்துவம் அந்த சமூக சூழலிலேயே வளர்ந்தது. மேற்கு ஐரோப்பாவிலே இது தோன்றும் போது-நிலப்பிரபுத்துவத்தை முழுங்கி ஏப்பம் விட்டது. அப்பொழுதிருந்த மிகத்துல்லியமான பண்ட உற்பத்திமுறையானது விவசாயமும், பட்டறைத்தொழிலுமேயாகும். வர்த்தகமோ-வாணிபமோ இவ்வுற்பத்திமுறைக்குள்ளேயே அடங்கி நின்-

று. ஐரோப்பிய முதலாளித்துவமானது அதைச் சூழவுள்ளா-
ஐரோப்பிய நாகரிகத்திற்கப்புறம்பான நிலப்பரப்பு எல்லைக-
ளாற் சூழப்பட்டிருந்தது. இவ்வெல்லைகளிலே ஏற்பட்ட வளர்ச்சிகள், நொமாட்டுகளின் ஆதிகம்யூனிச உற்பத்தி முறை, வேட்டையாடுவோர், விவசாயிகள், பட்டறையாளர்கள் போன்ற உற்பத்தி முறைகளாற் சூழப்பட்டிருந்தது. இந்தச் சூழலிலே மூலதனம் திரண்டது எவ்வாறு? முதலாளித்துவத்தின் வளர்ச்சியை நாம் பார்ப்போமானால் அதன் மூன்று படிநிலைகளைக் காணலாம். ஒவ்வொரு நாட்டிலுமிருந்து இயற்கைப் பொருளாதாரத்திற்கு எதிரான போராட்டம், பண்ட உற்பத்திப் பொருளாதாரதிற்கு எதிரான போராட்டம், சர்வதேசமேடையில் மூலதனத்தின் போட்டி.

முதலாளித்துவத்தைச்சூழ, முதலாளித்துவமற்ற உற்பத்தி முறை நிலவவில்லையெனின் முதலாளித்துவம் உயிர் வாழ்ந்திராது. ஆனால் இவைகள் கூட முதலாளித்துவத்தின் முழுத்தேவையையும் பூர்த்தி செய்யவில்லை. முதலாளித்துவத்திற்கு அதன் உபரிபெறுமானத்தின் சந்தையாகவும், இதன் உற்பத்திச்சாதனங்களை விநியோகிப்பதற்கும், இதன் கூலிகொடுத்து வாங்கக்கூடிய பாட்டாளிகள் குழாமிற்கும் முதலாளித்துவமற்ற சமூகத்தட்டுத் தேவையாக இருந்தது. இயற்கைப் பொருளாதார உற்பத்திமுறை நிலவுமானால் மூலதனத்தின் மேற்கண்ட தேவைகளை பூர்த்திசெய்யமுடியாது. இயற்கைப்பொருளாதார உற்பத்திமுறைச் சமூக அமைப்புகள் எல்லாவற்றிலும், அது நிலங்களை பொது உடைமையாக வைத்த ஆதிவிவசாய சமூகமென்றாலும் சரி, நிலப்பிரபுத்துவ அடிமை முறை உற்பத்தியென்றாலும் சரி, அல்லது இவைகளைப் போன்று எந்தவொரு அமைப்புமுறையென்றாலும் சரி அவை உள்நாட்டுத் தேவைக்கேற்ப உற்பத்தி செய்யும் அமைப்புகளாகும். அவைகளுக்கு வெளிநாட்டுப் பொருட்களின்-

தேவை அறவே இல்லாமல் அல்லது மிகக்குறைவாகவே தேவைப்பட்டது. ஆகவே அங்கே அதிக அளவு உபரி உற்பத்தி தேவைப்படவில்லை. உபரியாக உற்பத்திசெய்தவைகளையும் வேறெங்காவது கொண்டு போய்க் கொடுக்க வேண்டிய தேவை இருக்கவில்லை. எந்தமுறை இயற்கைப் பொருளாதார உற்பத்திமுறையிலும், உற்பத்திச் சாதனங்கள் உற்பத்திச்சக்திகளுக்குச் சொந்தமாகவோ அன்றேல் முன்னது பின்னதாகவோ ஏதோ ஓர் உறவுமுறையில் அமைந்திருக்கும். ஆதலால் உற்பத்தி தங்குதடையின்றிப் போய்க்கொண்டிருக்கும். ஆதிபொதுவுடமை விவசாய சமூகமானது, நிலப்பிரவுத்துவ பண்ணைகளினதோ, அன்றேல் அதுபோன்ற அமைப்புகளினது சட்ட, சம்பிரதாய, விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு உற்பத்திச்சாதனமான நிலங்களைப் பாவிப்பதில் எங்ஙொன்றும் சளைத்ததாக இருக்கவில்லை. ஆதலால் இயற்கைப் பொருளாதார உற்பத்திமுறையானது முதலாளித்துவத்திற்கு எல்லாக் கோணங்களிலும் தடைகளாகவே அமைந்தன. ஆதலால் முதலாளித்துவம் வரலாற்றுரீதியாக வளர்ச்சிகண்ட எல்லா இயற்கைப் பொருளாதார முறைகளையும், உடைப்பதற்கும், சிதைப்பதற்கும், எல்லா இடங்களிலும் எல்லாக் காலங்களிலும் போராடியது. அது அடிமைமுறைப் பொருளாதாரம் என்றாலும் சரி, நிலப்பிரபுத்துவ முறையென்றாலும் சரி, அது பொதுவுடமைமுறையோ தந்தைவழி விவசாய முறையென்றாலும் சரி, அவைகளை அழிக்கவே போராடியது. இந்தப் போராட்டங்களிலே அரசியல் அதிகாரத்தை (புரட்சி அல்லது யுத்தம்) பிரயோகித்தது. அரச ஒடுக்குமுறை, வரிவிதிப்பு, மலிவாகப் பொருட்களை வினியோகித்தல் பிரதியீட்டுப் பொருட்களை விநியோகித்தல் போன்றவற்றைச் செய்தது. ஐரோப்பாவிலே நிலப்பிரவுத்துவத்திற்கு எதிராகப் புரட்சி செய்தது. இவர்கள் கூறும் 17ம், 18ம் நூற்றாண்டுகளின் முதலாளித்துவ

ஜனநாயகப் புரட்சி என்பது இதுதான். ஐரோப்பா தவிர்ந்த மற்றைய நாடுகளில் ஆதி சமூக அமைப்புகளுக்கு எதிராகப் போராடியது. காலனிகளை அமைத்தது. இந்த முறைகளிலே ஆதி சமூகங்களை அரிவித்தும், வர்த்தக உறவை ஏற்படுத்தியும், அரசியல் அதிகாரமும், பொருளாதாரமும் கைகோ கைகோர்த்துச் செல்லும் ஓர் உறவு முறையையும் ஏற்படுத்தியது.

விபரமாக சொல்வதெனில் மூலதனமானது சமூகங்களின் இயற்கைப் பொருளாதாரத்தை அழித்துப் பின்வருவனவற்றை எய்துவதற்காகப் போராடியது.

(1) அது முக்கிய உற்பத்திச் சாதனங்களான, நிலம், காட்டிலுள்ள வேட்டை மிருகங்கள், கனிப்பொருட்கள், மரவளங்கள், , இரத்தினக்கற்கள், தாது உப்புக்கள், றப்பர் மரங்கள் போன்றவற்றின் வளங்களை உடைமையாக அபகரிப்பதற்காகப் போராடியது.

(2) உழைப்பாளரை விடுவித்துப் பலாத்கார சேவையில் ஈடுபடுத்தியது.

(3) பண்ட உற்பத்திப் பொருளாதாரத்தை அறிமுகம் செய்தது.

(4) வர்த்தகத்தையும் விவசாயத்தையும் பிரித்து வைத்தது.

மூலதனம் திரளத்தொடங்கிய தொடக்க காலங்களில், மத்திய காலந் தொடக்கம் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை இங்கிலாந்திலும், ஐரோப்பாக் கண்டத்திலும் உள்ள விவசாயிகளின் உடைமைகளை இல்லாமல் செய்தது. உழைப்புச்சக்தியை மூலதனமாக்குவதில் பெருமட்டத்தில் செயல்பட்டது.

காலனிகள் பிடித்த காலத்தில் மூலதனம் அதிகாரத்தில் இருந்ததால் இந்தமாற்றங்களை இன்னும் பெருமளவிற் செய்தது. மூலதனமானது தனது பண்டமாற்றங்களினூடாக, தான் அபகரித்து வைத்துள்ள உற்பத்திச்

சாதனங்களோடு திருப்தியடையும் என்று எதிர் பார்ப்பது வெறும் பிரமையேயாகும். இந்தக் காலத்தில் பூகோளத்தின் மேற்பரப்பிலுள்ள பெருமளவு சமூகங்கள் பண்ட உற்பத்திமுறையில் அவாவுற்று இருந்தமையால் மூலதனம் பெரிதும் கஷ்டப்பட்டது. இந்த சமூக அமைப்புகள் தங்களது உடமைகளையோ, உற்பத்திச்சாதனங்களையோ, விற்பதற்கு சிந்தித்தும் விருப்பமற்றே இருந்தன. மூலதனத்திற்கு அவை தேவையாக இருந்தது. அவற்றுள் முக்கியமான நிலம், நிலத்தினுள் மறைந்திருந்த கனிவளங்களையும் புற்தரைகள், மரங்கள், நீர்நிலைகள் உடனே அபகரிக்க வேண்டும். இந்த உற்பத்திசாதனங்கள் தமக்குள்ளே சீர்குலைந்து முதலாளித்துவ உற்பத்தி வடிவத்தை எடுக்கும் வரை மூலதனம் காத்திருக்கவேண்டுமானால்-பலநூற்றாண்டு காத்திருக்க வேண்டும். அது மட்டும் பொறுமையோடு பொறுத்திருக்க மூலதனத்தால் முடியாது. ஆதலால் முதலாளித்துவத்திற்கு காலனிகளிலுள்ள மிகமுக்கிய உற்பத்திச் சாதனங்களை அபகரிக்க வேண்டியது நிர்ப்பந்தமாகும். ஆதிசமூக அமைப்பு முறைகள் தங்களது உயிர் வாழ்தல் இந்த உற்பத்திச் சாதனங்களில் தங்கி இருந்ததால் அவை இவைகளைப் பகீரதப்பிரயத்தனம் எடுத்துப் பாதுகாத்தன. மூலதனம் தனது முன்னேற்றத்திற்குத் தடையாக இருந்த முதலாளித்துவமுறையற்ற உற்பத்திச் சாதனங்களை வரிசைக்கிரமமாக திட்டம் போட்டு அழித்தது. இது தொடர்ந்து நடைபெற்றது. காலனி விரிவடைந்து கொண்டு போகும்பொழுது கடுமையான யுத்தங்களும், தேசிய பொருளாதார உற்பத்திமுறை தகர்ந்து கொண்டும், உற்பத்திச்சாதனங்களும், உழைப்புச் சக்தியும் கொள்ளையடிக்கப்பட்டுமே சென்றன. மூலதனம் அமைதியான முறையில் திரண்டது கிடையாது. முதலாளித்துவ-

உற்பத்தியாளர்களுக்கிடையே அமைதியான போட்டி நிலவியதாலும் அது மற்றைய நாட்டு உற்பத்திச் சாதனங்களையும் சமூக அமைப்புகளையும் இரையெடுத்து ஏப்பம் விட்டது. அமைதியான முறையில் மூலதனம் திரள வேண்டுமானால் இயற்கைப் பொருளாதாரம் உக்கி உழுத்து முதலாளித்துவ உற்பத்திமுறையான பண்ட உற்பத்தி முறையையும் பாட்டாளிவர்க்கத்தையும் உருவாக்குவதற்கு பல நூற்றாண்டுகள் ஆகும். மெல்ல மெல்ல உழைக்கும் மக்களின் எண்ணிக்கை கூடும் வரையும் பண்ட உற்பத்திமுறை வளரும் வரையும் பொறுப்பதற்கு மூலதனத்தால் முடியாது. குறுகிய நாட்களில் பலமடங்காக மூலதனம் திரளாதுவிடின் அதன் உடமையாளர்கள் திருப்தியடைய மாட்டார்கள். ஆதலால் பலாத்காரம் என்றே மூலதனத்தின் ஜீவமந்திரமாய் விளங்கியது. மூலதனத் திரட்சியின் நிகழ்வுப் போக்கில் பலாத்காரம் என்றே நிரந்தர ஆயுதமாய் விளங்கியது. இன்று வரை அதைத் திரட்டும், பாதுகாக்கும் ஆயுதமாகப் பலாத்காரம் ஒன்றே விளங்குகின்றது. ஆதி சமூகங்கள் இந்தப் பலாத்காரத்திற்கு எதிராகக் கடைசி அந்தமட்டும் போராடின. அவற்றில் பல அழிந்து விட்டன. அமெரிக்கா கண்டத்திலிருந்த செவ்விந்தியர்களும், தென் சமுத்திரத் தீவுகளான அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, நியூக்கினி தீவுகளில் வாழ்ந்த தேசிய இனங்களும் இப்போராட்டத்தில் பூண்டோடு அழிந்து விட்டன. இந்தியாவில் மில்லியன் கணக்கானவர்கள் செத்தார்கள். 1891 தொடக்கம் 1900 ஆண்டு வரையிலுள்ள பத்து வருடங்களில் மாத்திரம் 19 மில்லியன் பேர் செத்தார்கள். இந்திய இனம் சக்தியுள்ள இனமாக இருந்தபடியால் பூண்டோடு அழிவதிலிருந்தும் தப்பிக்கொண்டது. ஆனால் இந்திய சமூகத்தின் உள்ளுடன்கள் -

உறிஞ்சப்பட்டு சக்கையே விடப்பட்டதால் அது சாகும் தறுவாயில் தத்தளித்தது. மற்றய காலனிகளைப் போலவே பலாத்காரத்திற்காக இந்தியாவையும் இராணுவம் ஆக்கிரமித்துக் கொண்டது. முதலாளித்துவத்திற்கும், இயற்கைப் பொருளாதாரத்தைப் பாதுகாக்கும் அமைப்புகளுக்குமிடையே முட்டி மோதல்கள் நடைபெற்றன. உற்பத்திச் சாதனங்களும், உழைப்புச் சக்தியும் முதலாளித்துவத்தால் அபகரிக்கப்பட்டு அவர்கள் உற்பத்தி செய்யும் பண்டங்களை விலைக்கு வாங்குபவர்களாக ஆக்கப்பட்டது. இந்த முறையானது அதிகலாபத்தையும், திடீர் விளைவையும் மூலதனத்திற்குக் கொடுத்தது. இது முதலாளித்துவத்தின் உன்னத பாணியாகியது. இதைச் செவ்வனே செய்வதற்காக இராணுவபலம் தொடர்ச்சியாகக் கூடிக் கொண்டு வந்தது.

மூலதனத்தின் திரட்சியில் மில்ரநி ஓர் உன்னத பாத்திரத்தை வகித்தது. தொடக்க காலத்தில் ஐரோப்பாவில் " தொடக்க மூலதனத்தை திரட்டவும்" இந்தியாவைக் கைப்பற்றவும், பின்னாளில் காலனிகளில் இருந்த ஆதிசமூக அமைப்புக்களை தகர்க்கவும், அவைகளின் உற்பத்திச் சாதனங்களைப் பறித்தெடுத்து பலாத்காரமாக பண்டங்களின் வர்த்தகத்தை நிர்மாணிக்கவும், தேசிய உழைப்பாளர்களை காலனிகளில் கூலிக்கு வேலை செய்யப்பண்ணவும் உதவியது.

1793 ல் வங்காளத்திலிருந்த பிரித்தானியர் ஜமீன்தார்களிடம் (முகமதிய வரி வாங்குவோர்) நிலங்களை ஒப்படைத்து அம்மாவட்டங்களிலுள்ள விவசாயிகளுக்கு எதிராக பிரச்சாரம் செய்தனர். இதே கொள்கையை மேலும் அக்கிரம், மத்தியமாகாணங்களுக்கு விரிவு படுத்தினர். விவசாயிகள் வெகுண்டெழுந்து எதிர்த்தாக்கம் புரியவே வரிவாங்குவோர் பின்வாங்கி ஓடினார்கள். JAMES MILL-

தனது HISTORY OF BRITISH INDIA என்ற புத்தகத்தில் பின் வருமாறு எழுதுகின்றார். வரிவாங்குவதற்கு அனேக மாகாணங்களுக்கு அனேகர் சென்றனர். அந்த நிலங்களுக்கு யார், யார் சொந்தக்காரர் என்று கண்டு பிடிக்க முடியவில்லை. (1840 ஆம் ஆண்டு பதிப்பு பக்கம் 31) இந்தக் கிட்டிய காலத்திற்கூட நிலங்கள் வேலி போடாது பொதுவுடைமைச் சொத்தாகவே இருந்தன. இதன் காரணமாக பிரித்தானிய முதலாளிகள் தறிப்பிட்டளவு நிலங்களை அபகரித்துக்கொண்டனர்.

பயிர் செய்பவர்களைக் கண்டு பிடித்தால் அவர்களிடம் கடும் வரியை வசூலித்தனர். 1864 பிரித்தானிய வரிவசூலிப்பாளரின் அறிக்கையின்படி இந்த வரி வசூலிப்பு அதிகமாக டெல்கி, அலகபாத் மாகாணங்களில் செயற்பாட்டில் இருந்தது. வரிச்சுமையை செலுத்தமுடியாமல் விவசாயிகள் நிலத்தை தத்தகைக்கு விட்டோ அல்லது பகுதி நிலங்களை விட்டோ வரியிறுவையைச் செலுத்தினர். வரியென்ற வஞ்சனைமுறையால் இந்தியக்கிராமங்களிலுள்ள சமூக அமைப்புகள் விழுங்கப்பட்டன. வரிவசூலித்தலை உக்கிரமாக்கும் முகமாக பயிர் செய்வோர் தங்கள் நிலங்களை அடையாளம் காட்டும், உரிமை காட்டும் உறுதிகளையோ, தோம்பு பற்றிய நில சாட்சியங்களையோ வைத்திருக்க வேண்டுமென்று சட்டங்களைக் கொண்டு வந்தது. வரிதுறைத்துக்கட்டுதலைத் தடுப்பதற்கு வரிவாங்குவோருக்குத் துலாம்பரமான எல்லைகளோ, வேலிகளோ போட்டுக் காட்ட வேண்டுமென்று சட்டம் இயற்றியது. இதுவே தனியுடைமை வளர்வதற்கு ஏதுவாகியது. வரிப்பளு தாங்காமல் நாளுக்குநாள் விவசாயிகள் தங்களது பரம்பரை பரம்பரையான நிலங்களை இழந்தனர். மறுபக்கத்தால் ஜமீன்தார்கள், திவான்கள், பிரபுதாரர்கள், பண்ணையார்கள், முதலாளிகள். சம்பிரதாய

இந்த விவசாய பொருளாதாரத்திற்கு சாவுமணி அடிக்கப்பட்டது. செயற்கையாக ஒரு கூட்டம் நிலப்பிரபுக்களைப் பிரித்தானிய சாம்ராச்சியம் தோற்றுவித்தது. வாழையடி வாழையாக நிலங்களின் உரிமைக்காரர்களாக இருந்த விவசாய சமூகங்கள் ஆண்டிகள் ஆக்கப்பட்டனர். ஒரு குறுகிய காலத்துள் பல எஸ்டேட்டுக்கள் தோன்றிவிட்டன. பெருந்திரளான விவசாயிகள், வறியவர்களாகி குத்தகைக்கோ, வாடகைக்கோ, வாரத்திற்கோ, பயிர் செய்பவர்களாக மாறிவிட்டனர். JAMES WILSON - தனது HISTORICAL AND DESCRIPTIVE ACCOUNT OF - BRITISH INDIA என்ற புத்தகத்தில் பின் வருமாறு கூறுகிறார். "மட்டாறு மாகாணத்தில் மிகவும் வியக்கத் தக்க முறையில் நீர்ப்பாசன அமைப்பு முறைகள் இருந்தன - நாம் இந்தியாவை பிடிக்கும் வரை இவை பாதுகாக்கப்பட்டிருந்தன. மலை இடுக்குகளில் ஓடும் ஆறுகளுக்கு அணை போட்டு பெரிய குளங்கள் உண்டாக்கப்பட்டன. குளங்களிலிருந்து கால்வாய்கள் மூலம் 60 முதல் 70 மைல்கள் வரை நீர்ப்பாசனம் செய்யப்பட்டன. பெரிய ஆறுகளிலே 30 தொடக்கம் 40 அணைக்கட்டுக்கள் போடப்பட்டிருந்தன. மலைத்தொடர்களிலே வரும் மழை நீர்கள் செயற்கையாக தாங்களில் தேக்கப்பட்டன அவற்றுள் பல இன்னும் அழியாமல் உள்ளன. அவற்றின் சுற்றளவு 15 தொடக்கம் 26 மைல்கள் வரையிலிருக்கும். இப்படியான இராட்சத அமைப்புகளெல்லாம் 1750 க்கு முன்னரே பூர்த்தியாகி இருந்தன. கிழக்கிந்திய கம்பனிக்கும், மங்கோலிய ஆளுனர்க்கிடையே நடந்த சண்டைப் பொழுதிலும் எங்களது ஆட்சிக் காலங்களிலுமே இவை அழிந்து பட்டன" (பக்கம் 427 JAMES WILSON)

விவசாயிகள் தங்களது நிலங்களிலிருந்து துரத்தப்பட்டதால் வருடா வருடம் அணைகட்டுதல் மற்றும்

துரவு தோண்டுதல் போன்ற வேலையைச் செய்யாது விட்டுவிட்டனர். பிரித்தானிய மூலதனமானது இந்திய சமுதாயத்திற்கு எந்த வித பொருளாதார உதவியோ உயிர் வாழ்வதற்கான உதவியோ செய்தது கிடையாது அதற்கு மாறாக அவைகளை அழித்தன. இந்தக் கோரச்செயலினால் மில்லியன் கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர். 1867ல் ஒரிசாவில் மாத்திரம் ஒரு மில்லியன் பேர் கொல்லப்பட்டனர்.

வங்காளத்தில் பறித்தெடுக்கப்பட்ட விவசாயிகளின் நிலப்பரப்புகளில் அபின் செடி நாட்டப்பட்டது. 1873ல் இந்தியாவில் 6000,00 தொன் அபின் உற்பத்தி செய்யப்பட்டது. இதனால் கிழக்கிந்தியக் கம்பனி £ 7,500,000,000-லாபமாகப் பெற்றது. நிலங்களிலிருந்து துரத்தப்பட்ட இந்தியர்கள் பஞ்சைகளாய்ப் பராரிகளாய் ஆகிவிட்டனர். அன்றைய பருத்தி, றபர், கரும்பு, போன்றவையே பெரிய பொருளாதாரத்தை ஈட்டித்தந்தன. பிரித்தானிய ஏகாதிபத்தியம் பெருந்தோட்டப்பயிர்ச் செய்கையை மேற்கொள்ள புதிய மூலோபாயத்தைக் கடைப்பிடித்தது. தேசிய இனங்களை கொன்று குவித்ததன் விளைவாக ஏற்பட்ட வெற்றிடங்களை பஞ்சைகள், பராரிகள் ஆக்கப்பட்ட இந்தியர்களை கொண்டு ஈடுசெய்தது. ஆபிரிக்கா கிழக்கிந்திய தீவுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். இவர்களுள் அனேகர் தமிழர்கள். ஆபிரிக்கக் கரும்புத் தோட்டங்களிலே, பர்மாக்காடுகளிலே, இலங்கைமலைகளிலே, தமிழர்கள் எடுத்துச் செல்லப்பட்டனர். அன்று அவர்களது புதிய பெயர் கூலிகள். இன்றைய பெயர் அகதிகள், பர்மா அகதிகள் உகண்டா அகதிகள், சிலோன் அகதிகள், இலங்கையில் காலத்திற்குக் காலம் தமிழர்கள் தாமே குடியேறின கதை ஒருபுறம், இந்தத் தோட்டத் தொழிலாளர்கள் குடியேற்றப்பட்ட விதம் வேறொரு புறம்.

இலங்கையில் முதல்முதல் குடியேற்றப்பட்ட தோட்டத்-
தொழிலாளர் மிகவும் வீரியம் நிறைந்த பரம்பரை.
இந்தியாவில் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் வரிவசூலி-
த்தவர்களை எதிர்த்தவர்களும், காணி அபகரித்தலுக்கு
எதிராகப் போராடிய புரட்சியாளர்கள் சிறைப்பிடி-
க்கப்பட்டு பிரித்தானிய சாம்ராச்சிய சட்டத்தின் கீழ்
கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர்கள். இவர்
களது கடூழியத்தை இலங்கைக்காடுகளை செப்பனிடுவ-
தற்குப் பயன்படுத்தப்பட்டது. இவர்களை பலாத்கார-
மாக கப்பலில் ஏற்றி வந்து வேலை வாங்கினர். இவ-
ர்களில் அனேகர் மலேரியா போன்ற நோய்களி-
னாலும் பசிபட்டினியாலும் இறந்தொழிந்தனர்.

இரண்டாவது முறைதான் கங்காணிமுறையினை
அறிமுகம். கங்காணி முறையென்பது, பிரித்தானிய வால்-
பிடிகள் நூறு இருநூறு தொழிலாளர்கள் மட்டில் —
இந்தியாவிலிருந்து கூட்டிக்கொண்டு வந்து மலைக்கா-
டுகளை அழித்து தோட்டங்களை உண்டாக்குதல்.
இது ஏக்கர் கணக்கைத் தோட்டமாக்குவதற்கெ-
ன்று, அல்லது இவ்வளவு எண்ணிக்கைத் தொழிலா-
ளர்களை கொண்டு வருவதற்கு இவ்வளவு காசு என்று
கொந்தராத்துப் பேசி, கங்காணிகளுக்கு வழங்கப்பட்டது.
இந்தக் கங்காணிகள் இல்லாத பொய்களையெல்லாம்
சொல்லி, ஆசைகாட்டி மோசம் செய்தே இத்தொழி-
லாளர்களை இலங்கைக்கு கூட்டி வந்தனர். உணவி-
ல்லாமல் பட்டினியால் வாடியவர்களுக்கு நேரத்திற்கு-
நேரம் சாப்பாடு அன்றேல் ஒரு நாளைக்குக் கூலி ஆணு-
க்கு 50 சதம் பெண்ணுக்கு 20 சதம் பிள்ளைக்கு 10 சதம்
என்ற சம்பளமுறையிலே தான் கூட்டி வந்தார்கள்.
இந்தக் காலத்தில் தான் பெண் தோட்டத்தொழிலாளர்-
கள் இலங்கைக்கு வந்தனர். இவர்களிலும் புல்லா —

யிரக்கணக்கானவர்கள் இறந்தொழிந்தனர். சீரற்ற-நேரங்கள் காரணமாக பிரித்தானியர் கங்காணிகளுக்கு வழங்கும் மாபீட்டையும், சீனியும் பலமாதங்கள் வராது விட்டுவிடுவதுண்டு. செழுமை நிறைந்த இலங்கைக் காடுக-ளில் காய்கறிகளும், மிருகங்களுமே இவர்களது உட-லில் உயிரைப்பிடித்து வைத்திருந்தது. 1900ம் ஆண்டு வரை. மலேரியா தடுப்பு மருந்து வழங்கப்பட்டதற்கான ஆதா-ரங்கள் தென்படவில்லை. காடுகளின் அகிற் புகைகளின் துணையாலேயும் தங்களுக்குத் தெரிந்த இயற்கை வைத்-திய முறைகளினாலுமே நோய்களிலிருந்து தப்பிக் கொ-ண்டனர்.

இவர்களுள் மூன்றாவது வகையினர் இலங்கை, இந்தியாவிலிருந்து துண்டாடப்பட்ட பிறகு அதாவது இலங்கை சுதந்திரமடைந்த பிறகு வந்தவர்களாகும். இவ-ர்களுள் அநேகர் பிரஜா உரிமைச்சட்டம் கொண்டு-வந்தபின் இலங்கை அரசாங்கத்தின் விருப்புக்கு மாறாக இலங்கைக்கு வந்தவர்களாகும். இவர்கள் அன்று இந்-தியாவின் நிலவிய பொருளாதாரப்பின்னடைவின் உந்-தலால் உயிர் தப்புவதற்காக கள்ளமாக தோணிகள் மூலம் வந்தவர்களாகும். ஆதலால் "கள்ளத் தோணிகள்" என்னும் திருநாமஞ்சூட்டப்பட்டவர்களாகும் இந்தக் கள்ளத்தோணித் தமிழர்கள். இலங்கைக்கு எவ்வாறு கொணரப்பட்டார்கள் என்பது இன்றைய இளைய-தலைமுறையினருக்கு மறைக்கப்பட்டு விட்டது. அன்று அபின் போன்ற போதைப் பொருட்களை இந்தியாவிலி-ருந்து கடத்துவதிலும் பார்க்க இந்தக் கள்ளத் தோணி-களைக் கடத்தி வருவது லாபம் தரும் செயலாக இருந்-தது. இந்தக் கள்ளத் தோணிகளை பாக்குத் தொடுவாய் கடலின் கரையோரமாகவிருக்கும் வடமாகாண வியா-பாரிகள் கடத்தி வந்தனர். இப்படிக் கடத்தி வந்த-

தமிழர்களை கொழும்பிலும் மற்றைய இலங்கையில் கடை போட்டிருக்கும் கடைச் சொந்தக்காரர்களுக்கு விற்றனர். ஒரு கள்ளத்தோணி இருநூறு ரூபாய் தொடக்கம் மூந்நூறு, நாநூறு ரூபாய் வரை விலைப்பட்டான். இவர்கள் கடைகளிலே தேத்தண்ணி வைத்தல், உழுந்தரைத்தல் போன்ற வேலைகளைச் செய்தனர். இவர்களுக்கு கூலியேதும் வழங்கப்படுவதில்லை. இவர்களை காசு கொடுத்து வாங்கிய முதலாளி ரோமாபுரி அடிமைகள் போலவே பாவித்தான். வவுனியா, கொரப்பத்தானை போன்ற காட்டுப்பிரதேசங்களில் கடைகளில் வேலை செய்தவர்கள், அட்டூழியத்திற்கு எதிராக வெகுண்டெழுந்தபொழுது கொல்லப்பட்டு காடுகளிலே தாழ்க்கப்பட்டனர். ஐம்பதின் பின் பகுதியில் நெடுங்கேணியிலே இந்தக் கள்ளத்தோணித் தமிழன் தேத்தண்ணி ஆற்றியபோது தேத்தண்ணிக்குள் இலையான் விழுந்த பொழுது அடித்துக் கொல்லப்பட்ட கொலை வழக்கை அமரர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் கியூ.சி. வென்று கொடுத்த செய்தியை பழம் பத்திரிகையைப் புரட்டுபவர்கள் கண்டுகொள்வர்.

இந்தக் கள்ளத்தோணித்தமிழர்களைக் கடத்திக்கொண்டுவரும் தோணிகள் பறிமுதல் செய்யப்படும் என்னும் சட்டத்தை அரசாங்கம் கொண்டு வந்தது. கடலிலே இவர்களைக்கடத்திக் கொண்டு வரும்பொழுது கடற்படையினரைக்கண்டதும் தோணியைப்பறிமுதல் செய்யாது காப்பாற்றுவதற்காக அவர்களைக் கடலினுள் தள்ளிவிழுத்திக் கொன்றனர். இவர்களுள் கரைக்கு அண்மையிற் தள்ளிவிழுத்தப்பட்டவர்களுள் நீந்திக் கரை சேர்ந்த சம்பவங்களும் உண்டு. இவர்களுள் அனேகர் இரண்டு மூன்று வருடம் தன்னை விலைக்கு வாங்கியவர்களுக்கு வேலை செய்துவிட்டு, மத்திய இலங்கையிலுள்ள-

தங்களது இனபந்துக்களிடமோ, நண்பர்கள், தெரிந்-
தவர்களிடமோ போனதுண்டு. இவ்வாறாகத்தான்
இந்தத் தோட்டத்தமிழர்கள் இலங்கைக்குக் கொண
ரப்பட்டார்கள். இவர்களை இலங்கையின் கவண்மேந்து
வேலைபார்த்த தமிழர்கள் அழைத்த விதம் தோட்டக்
காட்டான், குழைக்காட்டான், வடக்கத்தையான்.
இன்றைய தமிழீழ இளையதலைமுறையினர் அந்தரமட்டத்
திற்கும் திருமணத்தர்களாக இல்லாவிட்டாலும் எங்களது
முந்திய பரம்பரையினர் செய்ததை நாம் பூசிமெழுகி
விடமுடியாது.

17ம் நூற்றாண்டுகளில் இவர்களை இலங்கைக்கு
கொண்டு வந்தால், இலங்கையின் இயற்கைப் பொரு
ளாதாரத்திற்கு என்ன நடந்தது. இந்தத் தோட்டத்
தமிழர்கள் இலங்கைக்கு கொண்டுவரப்படுவதற்கு
முன், இந்த மலைப்பிரதேசங்களின் கணவாய்களிலே,
சிங்களக் கிராமங்கள் இருந்து வந்தன. இந்த ஆதி சிங்
களவர்கள் நீர்வளம், நிலவளம் நிரம்பிய இந்த மலைப்
பிரதேசங்களில் வயல்களையும், கால்வாய்களையும் அமை
த்து மூன்று போக நெற்சாகுபடி செய்து வாழ்ந்தனர்.
அவர்கள் எந்தமட்டத்திற்கு நீர்பாசன, வடிகால்முறை
களை அமைத்திருந்தார்கள் என்பதை எனசல்கொல்லைப்
பிரதேசத்தில் இன்றும் காணலாம். அங்கு இன்று இருபது,
முப்பது மைல் நீளமுடைய வாய்க்கால்கள் இருப்பதைக்
காணலாம்.

இந்த மலைப்பிரதேசங்களில் காடுகள் அழிக்கப்
பட்டு பெரும் தோட்டப்பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்ட
போது, இந்தச் சிங்கள விவசாயிகள் காடுவெட்டுவோரை
எதிர்த்துப் போராடினர். துவக்கும் கையுமாக இருக்கும்
வெள்ளைக்காரத் துரையை இவர்களால் அணுக முடிய
வில்லை. இவர்கள் சண்டிக்குக் காடுவெட்டவும் இந்தத்

தமிழர்களையே தாக்கினர். இந்தக் கூலிக்குக் காமல்லவேட்டுவோருக்கும் சிங்கள விவசாயிகளுக்கும் ஒவ்வொரு தோட்டங்களிலும் பெரும் சண்டை நிகழ்ந்து கொண்டே வந்தது. சிங்கள தமிழ் விரோதம் தோன்றுவதற்கு அத்திவார மாக இதுவே இருந்தது.

ஆதி சிங்கள விவசாயிகள், தங்களது பாரம் பரியக் கிராமங்களை விட்டு அயலிலுள்ள கிராமங்களுக் குக் குடிபெயர்ந்தனர். குடிபெயர மறுத்தோர் கடைசிவரை போராடி மாண்டனர். பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் மிலேட்சத்தனம் இவர்களைப் பின்னடையச் செய்தது. பிரித் தானிய ஏகாதிபத்தியம் இலங்கையின் இயற்கைப் பொரு ளாதார அமைப்புமுறையைச் சிதைத்தது. அந்தப் பழி தோட்டத் தொழிலாளர்களின் தலையில் விழுந்தது.

இலங்கையின் தொழிலாளர் இயக்கங்களின் வளர்ச்சியை அறுகிறவர் தோட்டத் தொழிலாளர்களின் போராட்டங்களின் சிறப்பான அம்சங்களைக் கண்டு கொள்வர். இலங்கையின் முதலாவது அணிதிரட்டப் பட்ட தொழிற்சங்கம் அரசாங்க எழுதுவினைஞர் சங்கமாக இருந்தாலும் அதற்கு முன்னரே தோட்டத் தொழிலாளர் கள் இலேசாக அணிதிரட்டப்பட்டிருந்தனர். தோட்டங் களில் கங்காணி முறை நிலவி வந்ததால் ஒவ்வொரு தோட்டத்திலுமுள்ள தொழிலாளர்கள் கங்காணிக்குக் கட்டுப்பட்டிருந்ததனால் எழுந்தமானத்தில் செயற்படும் "அராஜகம்" நிலவவில்லை. இதுவே கங்காணிமுறை செய்த ஒரே லாபம் எனலாம்.

1867இல் இந்தியாவில் நிலவிய பெரிய பஞ்சத் தினால் ஒரிசா மாநிலத்தில் மாத்திரம் ஒரு மில்லியன் பேர் கொல்லப்பட்டனர். அன்றைய கால கட்டத்தில் சுதந்திரமடைந்த வட அமெரிக்க விவசாயப் பொருட்கள் சந்தையில் பிரித்தானியாவோடு போட்டி போடக்கொண்

யிருந்தது. மறுபக்கத்தில் பிரான்சு கைத்தொழில் சந்தையில் போட்டி போட்டுக் கொண்டிருந்தது. காலனிகளில் பஞ்சமும் பசியும் தலைவிரித்தாடியதால் பிரித்தானிய பொருளாதாரம் அதலபாதாளத்திற்கு வீழ்ந்தது. பிரித்தானிய பாராளுமன்றத்திற்கு ஒரிசா சம்பவம் அதிர்ச்சியைக் கொடுத்தது. பிரித்தானிய பாராளுமன்றம் இரண்டு சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தது. காலனிகளிலுள்ள பெருந் தோட்டங்களில் "கட்டாய டிஸ்பென்சரி" முறையைக் கொண்டு வந்தது. மற்றும் காலனிகளின் உணவு உற்பத்தி முறை மேலும் வீழ்ந்து விடாதபடி கண்காணிக்க வேண்டும்.

இந்தக் காலங்களில் அநேக இந்தியர்கள் இங்கிலாந்துத் துறைமுகத் தொழிற் சங்கத்திலும், சுரங்கத் தொழிலாளர் தொழிற்சங்கத்திலும் அங்கத்தவர்களாக இருந்தனர். இவர்கள் இந்தியாவில் நடைபெறும் கொடுமைகளை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களையும் வேலை நிறுத்தங்களையும் செய்தனர். இதன் பயனாகத் தோட்டங்களிலே "கட்டாய டிஸ்பென்சரி" முறையும், தொழிற் சங்கம் அமைத்தலும் ஏற்பட்டது.

(அடுத்த இதழில் முடியும்)

## வெறும் உள்சண்டையே — பிராவ்டா

சோவியத் யூனியனின் "பிராவ்டா" பத்திரிகை பலஸ்தீன விடுதலை இயக்கத்தினுள் உள்சண்டை நிகழ்வதாக செய்தி வெளியிட்டுள்ளது. ஆனால் அசாத்தின் படைகளே நேரடியாக ரிபோலியிலுள்ள படாவி முகாமை ஆக்கிரமித்ததை உலகத்திலுள்ள பேயர்கள் கூட அறிவார்கள். அரபாத் இப்பிரச்சினைக்குள் சோவியத் யூனியனைத் தலையிடும்படி பலமுறை கேட்டதை அரசியல் அவதானிகள் அறிவர்.

வாசக நேயர்களே;

அடிமைத்தளை அறுக்கும்வரை நிம்மதிகாணமுடியாத உளப்பாங்கு கொண்டவர்களே! **எண்ணம்** பத்திரிகையை தமிழீழப்புரட்சிக்கு வேண்டிய அத்தனை அனுபவங்களையும் அறிவையும் தாங்கிவரும் ஒரு பூரண பத்திரிகையாக அபிவிருத்தி செய்வதற்கு உதவுங்கள். கன்பர்லைன்ஸ்பேகர் இலங்கைக்கு வந்து போனதன்பின்பும், தமிழீழ உரிமைக்காக குரல்கொடுத்த பத்திரிகைகளின்வாய் அடைக்கப்பட்டபிறகும் தமிழீழமக்களின் புரட்சி உணர்மையை ஓயவிடாது உறங்கவிடாது மாதாமாதாம் அறைகூவித்துயிலெழுப்பிக்கொண்டிருக்கும் **எண்ணம்** பத்திரிகையின் அபிவிருத்திக்காக உங்களாலான பண உதவி செய்யுங்கள். ஒரு புரட்சிப் பத்திரிகை விடுதலையின் ஜீவநாடியாகும். தமிழ் வெகுஜனங்களுக்கும் விடுதலை இயக்கத்திற்குமிடையே ஒரு பாலத்தை ஏற்படுத்துவதற்கும், சர்வதேச முற்போக்குச் சக்திகள் தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாட்டை தொடர்ந்து பரிசோதித்து ஒரு மயக்கமற்ற மதிப்பீட்டை எடுப்பதற்கும் எதிர் நீச்சலடிக்கும் **எண்ணம்** பத்திரிகையை இந்தத் தகாத காலத்தால் அழியவிடாது பாதுகாத்தல் தமிழ் மக்கள் ஒவ்வொருவரின் கடமையாகும். வாயாலே அரசியலை முணுமுணுப்பவர்கள் போல் நாளொரு பொய்யை பொழுதொரு குத்துக்கரணத்தை **எண்ணம்** செய்யவில்லை. வாய்ச் சவுடாலால் தமிழ் மக்களை வஞ்சித்து வாழ்பவர்களைப்போல், மாக்சிய வாதிகட்கு முன்னால் மாக்சியம் பேசுவதும் மாக்சிய விரோதிகளுக்கு முன்னால் மாக்சிய விரோதம் பேசுவதும் இந்தியாவில் ஒரு பொய்யும் ஜெர்மனியில் மறுபொய்யுமாக அரசியல் செய்யாமல் எல்லாவற்றையும்

# 4,000 DM

**எண்ணம்** எழுத்திலே பதியவைத்துள்ளது. பிரிந்து போகும் உரிமையை மறுக்கும் புரட்டல் மாக்சியவாதிகளதும், எல்லா சிங்களவரையும் இனவாதிகளாகக்காணும் தமிழர்களதும், வார்த்

தை வளைப்பால் தங்களது பிற்போக்குத்தனத்தை மறைத்த வர்களதும் ஒட்ட வெறுப்பைப்பெற்ற ஒரே பெருமையுடைய துதான் **எண்ணம்.** அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் C.I.A இனதும் செல்லப்பிள்ளையான U.N.P யைத் தூக்கியெறிந்து சோஷலிச தமிழீழத்தை வெல்வதற்கான வரலாற்றாலும் சமுகநடைமுறையாலும் மீண்டும் மீண்டும் பரீட்சிக்கப்பட்ட, சொந்தலாபம் கருதாத சர்வதேச சம்பந்தத்தை ஏற்படுத்தும் தமிழீழ சர்வதேச சம்பந்தக்குழுவின் மாத ஏடான **எண்ணம்** பத்திரிகையை அபிவிருத்தி செய்வதற்கும் அதன் சாரம்சத்தைச் சர்வதேச மொழிகளிலே கிரமமாகக் கொண்டுவந்து, தமிழ் மக்களுக்காக சர்வ தேச சமூக சக்திகளிடம் தூதனுப்புவதற்கும் போதிய நிதியைத் தந்துதவுங்கள். எமது உடனடி இலக்கான **4,000 DM** அடைவதற்காக இன்றே காசுக்கட்டளை மூலமோ, தபால்கட்டளை மூலமோ பணம் அனுப்பி உதவுங்கள். இந்த சர்வதேச சம்பந்தம் இறுக்கமாகவும் வஞ்சனை அற்ற முறையிலும் ஏற்படுதல் நிதிபற்றுக்குறையினால் தடைப்படுமாயின், இன்னும் பல ஆயிரம் தமிழ் உயிர்களை U.N.P யிடம் தாரைவார்க்க நேரிடும்.

சிறிது சிந்திக்குக
செவி மடுக்குக

சிரம் தாழ்த்தலுடன்

— வா. மகாதேவா —

**முகவரி**

V.MAHADEVA,
P.O.BOX 2004,
7030 BOBLINGEN,
WEST GERMANY.

**வங்கி**

V.MAHADEVA,
A/C 9037854,
DEUTSCHE BANK,
7000 STUTTGART-1
WEST GERMANY.

# செய்திகள்

## குழப்பமடைந்து இந்தியா போகத்தேவையில்லை காமினி.

"கலவரங்களினால் குழப்பமடைந்து எவரும் இந்தியா போகத் தேவையில்லை. இந்த நாட்டில் பிறந்தவர்கள் அனைவருமே இலங்கைப் பிரஜைகள். அவர்கள் இங்கு இருக்க சகல உரிமையுமுடையவர்கள். வேறு நாடுகளுக்கு போக வேண்டிய அவசியமில்லை" என்று காமினி திசாநாயக்கா கூறியுள்ளார். சமீபத்திய இனக்கலவரத்தின் போது நுவரெலியா மஸ்கேலிய தொகுதியில் கலவரத்தை நடாத்த முன்னின்று உழைத்தவரென்ற குற்றச் சாட்டைப் பெற்ற காமினி திசாநாயக்கா, தான் கலவரத்தின் போது கொழும்பில் நின்றதாகவும் கலவரம் தொடங்கிய நான்கு, ஐந்து நாட்களுக்குப் பின்னரே அமைச்சர் திரு. இராசதுரையின் வேண்டுகோளுக்கிணங்க, நுவரெலியாவில் டாக்டராக வேலைசெய்யும் திரு. இராசதுரையின் மகளை பாதுகாப்பாக அழைத்துவர பிரத்தியேக ஹெலிக் கொப்ரரில் (Helicofer) சென்று உடன் திரும்பி விட்டதாகவும் கூறி நுவரெலியா- மஸ்கேலியாவில் இருந்த அப்பாவித் தோட்டத்தொழிலாளர்களைப் பாதுகாப்பதை தட்டிக் கழித்தவர்.

## இராணுவமுகாம் சுற்றாடல் வீடுகளில் சோதனை:-

தலைமன்னார் தள்ளாடி இராணுவ முகாம்களின் சுற்றாடலில் உள்ள வீடுகள் சோதனைக்குள்ளாக்கப்படுகின்றன. வீடு வீடாக சோதனைக்குள்ளாக்கப்பட்டன. போது பலரையும் துன்புறுத்தல்கள் செய்ததாகவும் பலரை கைது செய்ததாகவும் செய்திகள் தெரிவித்தன. இதனால் இரவு நேரங்களில் மக்கள் நடமாட அஞ்சுகின்றனர். இந்தச் சோதனையின் போது இந்தியாவிலிருந்து மறைவாக வந்த பலரும் கைதாகியுள்ளனர். இது நீங்க, காரை நகர் பகுதியில் சோதனை நடாத்திய போது வெளிநாட்டுத் தலைவர்களின் படங்களையும் இராணுவத்தினர் கட்டாயத்தின் பேரில் அகற்றினர்.

## பாதுகாப்பான வாழ்வை உறுதிசெய்யுமாறு இந்தியஅரசு வலியுறுத்து:-

"இலங்கையில் இடம்பெற்ற வன்செயலால் பாதிக்கப் பட்டு இடம்பெயர்ந்தோர் தாங்கள் வேலைபார்த்து வந்த இடங்களுக்கு மீண்டும் திரும்பிச் செல்ல ஏற்றவாறு இலங் கையின் அவர்களின் பாதுகாப்பையும் வாழ்க்கைமுறைகளையும் உறுதி செய்யுமாறு இலங்கை அரசிடம் இந்திய அரசு வலியுறுத் தியுள்ளது" என இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. பி.வி. நரசிம்மராவ் லோகசபையில் கேள்வியொன்றிற்கு பதிலளிக் கையில் கூறினார்.

அவர் மேலும் "ஜூலை மாதம் நடந்த வன்செயலின் போது கொழும்பில் இந்திய தூதரகமும், கண்டியில் இந்திய உதவி தூதரகமும் சேதமடைந்தன. அவற்றிற்கும் இந்தியாவை சேர்ந்தவர்களுக்கும் ஏற்பட்ட நட்டஈடாக இலங்கை அரசு 12 லட்சத்து 68 ஆயிரத்து 655 ரூபாவைத் தந்துள்ளது. ஜூலை மாதம் 25ம் திகதிமுதல் அக்டோபர் 27ம் திகதிவரை மட்டும் 23,980 தமிழர்கள் அகதிகளாக வந்துள்ளனர். அவர்களுள் 15,338 பேர் இலங்கை கடவுச்சீட்டுக்களை வைத்திருந்த னர் எனவும் 7,602 பேர் இந்தியக் கடவுச்சீட்டுக்களை வைத் திருந்தனர் எனவும் 1,040 பேர் இலங்கை அடையாளச் சான்றி தழ்களை வைத்திருந்தனர் எனவும்" குறிப்பிட்டார்.

## வியாபார மொத்தவிற்பனை வரி அதிகரிப்பு:-

1984ம் ஆண்டுக்கான பட்ஜெட்டைத் தொடர்ந்து கட் டிட சாதனம், மின்சார அமைப்பு, மின்சார உபகரணங்கள் முதலானவை 33⅓ வீதத்தாலும், தகரத்தில் அடைக்கப்பட்ட மீன், நூடில்ஸ், கருவாடு, மாசி, கோப்பி, பப்படம், சவ்வரிசி, தையல் நூல், நீர்க்குழாய், பாலுணவுப் பொருட்கள், விவசாய கருவிகள், மிருக உணவுகள், முள்ளுக் கம்பி, பியர், சொக்லெட், ஐஸ்கிறீம் ஆகியவை 50% த் தாலும் வியாபார மொத்தவிற்பனை வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

## பஸ்களில் இராணுவ கெடுபிடி :-

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் தனியார் பஸ்கள் இராணுவத்தின் கெடுபிடிகளுக்குள்ளாகின்றன. கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் சென்ற இரு தனியார் பஸ்களில் கடந்த 29.10.85 சனியன்று டைனமைட் வெடிகள் அடங்கிய பார்சலிருந்ததையடுத்து எந்நேரமும் கெடுபிடிகளுக்குள்ளான பிரயாணிகள் மேலும் பல கெடுபிடிகளுக்குள்ளானார்கள். இதனால் பிரயாணிகள் பெரிதும் அசௌகரியங்களுக்குள்ளாவதுடன் பிரயாணம் செய்ய பெரிதும் பயந்துக்கொள்ளுகின்றார்கள்.

## வண. பிதா. சிங்கராயர் யாழ் கொண்டுவரப்பட்டார் :-

நோய்வாய்ப்பட்டு படுத்தபடுக்கையாக இருக்கும் வண. பிதா. சிங்கராயரின் தாயாரின் வேண்டுகோளுக்கிணங்க திரு. சிங்கராயர் கடந்த 1.11.85 செவ்வாய்கிழமை மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருந்து தாயாரைப் பார்வையிட கொண்டுவரப்பட்டார். யாழ்ப்பாணத்திற்கு அவரை அழைத்துச் செல்லும் விவகாரம் கடைசிவரை இரகசியமாக வைக்கப்பட்டிருந்ததுடன் யாழ்ப்பாணத்தில் பலத்த பாதுகாப்பும் போடப்பட்டிருந்தது. தமிழ் மக்கள் இலங்கை அரசுடன் விவாதித்து எதிர்த்ததன் பின்பு தமிழ்மக்களை திருப்திபடுத்த, அவர்களின் புரட்சி முனைப்பை மழுங்கடிக்க ஜெயவர்த்தனா பயன்படுத்திய அதியுத்தமே மேற்படி நிகழ்ச்சியாகும். இதனால் தமிழ்மக்களிடம் ஏதோ நல்லபேர் எடுக்கலாமென ஜெயவர்த்தனா எண்ணியே இந்நிகழ்ச்சியைப் பயன்படுத்தினார்.

## யாழ். பாஸ்போர்ட் அலுவலகம் மூடப்பட்டது:-

கையளிக்கப்பட்ட பாஸ்போர்ட்டுக்கான விண்ணப்பங்கள் அனைத்தையும் இராணுவ பாதுகாப்புடன் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டதுடன் யாழ், கண்டி, காலி அலுவலகங்களும் மூடப்பட்டன.

## திருகோணமலையில் இடைத்தேர்தல்:-

திருகோணமலைத் தொகுதிக்கான இடைத்தேர்தல் வேட்பாளர் மனுக்கள் டிசம்பர் 6ம் திகதி திருகோணமலை கச்சேரியில் வைத்து ஏற்றுக் கொள்ளப்படும் என விசேட வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி நியமனங்கள் ஏற்கப்பட்ட பின்னர் போட்டி இருப்பின் அன்றைய தினம் தேர்தல் தினம் அறிவிக்கப்படும் எனவும் டிசெம்பர் 30ம் திகதியிலிருந்து ஜனவரி 12ம் திகதிக்குள் வரும் ஒரு தினம் இடைத்தேர்தல் நாளாக இருக்குமெனவும் வர்த்தமானியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. திருகோணமலை எம்.பி. இரா. சம்பந்தன் தொடர்ச்சியாக மூன்றுமாத காலம் பாராளுமன்றம் செல்லாததால் மேற்படி இடைத்தேர்தல் நடைபெறுகின்றதென்பது யாவருமறிந்ததே. இவ் இடைத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி சுயேட்சையான ஒருவரை ஆதரிப்பதென முடிவெடுத்துள்ளது. யூ.என்.பி யும், சிறி லங்கா சுதந்திரக் கட்சியும் சேர்ந்த வேட்பாளரை நிறுத்தலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## சீன, அமெரிக்க பிரதிநிதிகள் கொழும்பில்:-

சீன வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் உதவி அமைச்சர் திரு. கொங்டாபேய் கொழும்பு வந்தார். இதே வேளையில் அமெரிக்க ஜனாதிபதியின் விசேட பிரதிநிதியாக மாலைதீவு செல்லும் தென்னாசிய பாதுகாப்பு பிரச்சினைகளில் கைதேர்ந்த தூதரான திரு வேர்னன் வோல்டர்ஸும் கொழும்பு விஜயம் செய்கின்றார். கொழும்பில் நிற்கும் வேளையில் கடந்த மாதம் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் திரு கஸ்பர் வெயின்பேர்க்கர் இலங்கை அரசுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகளின் தொடர்பாக மேலும் பேச்சுக்கள் நடாத்தலாமென தெரியவருகின்றது.

டாக்டர். தர்மலிங்கம், கோவை மகேசன் விடுதலை:-

தமிழீழ விடுதலை அணியின் தலைவர் டாக்டர். எஸ்.ஏ. தர்மலிங்கம் 5.11.83 இல் யாழ்ப்பாணத்தில் விடுதலை செய்யப் பட்டார். அவர் மட்டக்களப்பு சிறையின் இருந்து 2.11.83 வெள்ளிக்கிழமை விடுதலை செய்யப்பட்டாராயினும் அவர் யாழ்ப்பாணத்தில் தான் கைது செய்யப்பட்டதனால் தன்னை யாழ்ப்பாணத்திலே விடும்படி கேட்டதற்கிணங்க 5.11.83 மாலை 5 மணியளவில் விடுதலை செய்யப்பட்டார். சென்ற கிழமை திரு கோவை மகேசனும் விடுதலை செய்யப்பட்டார். இவர்கள் இருவரும் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஹர்த்தால் அமைந்து கைதுசெய்யப்பட்டவர்கள் என்பது ஏற்கனவே தெரிந்ததே. 74 வயது நிரம்பிய டாக்டர் எஸ்.ஏ. தர்மலிங் கம் தன் உடல்நிலைகாரணமாக ஓய்வு பெறப் போவதாக தற்போது அறிவித்துள்ளார்.

எதிர்கட்சித் தலைவராக அனுரா தெரிவு:-

தொடர்ச்சியான மூன்றுமாதம் பாராளுமன்றம் செல்லா ததால் காலியான எதிர்கட்சி தலைவர் பதவியை நிரப்ப 8.11.1983 பிற்பகல் 3 மணிக்கு பாராளுமன்றம் கூடியபோது நுவரெலியா - மஸ்கெலியா இரண்டாவது எம்.பியான திரு. அனுரா பண்டாரநாயக்கா புதிய எதிர்கட்சித் தலைவராக தெரிவானார். அதனைத் தொடர்ந்து அத்தனகல எம்.பியான திரு. லக்ஷ்மன் ஜயக்கொடி திரு அனுராவை அழைத்துவந்து எதிர்கட்சித் தலைவர் ஆசனத்தில் அமர்த்தினர். எதிர் கட்சித் தலைவர் தெரிவு நடைபெறும் போது அமைச்சர் இராசதுரை சபையிலிருந்தார். கிராமிய தொழிற்துறை அமைச்சர் திரு. எஸ். தொண்டமான், உள்நாட்டலுவல்கள் அமைச்சர், திரு. கே. டபிள்யு. தேவநாயகம் ஆகியோர் சபையில் இருக்கவில்லை. திரு. அனுரா தற்போது திரு. அமிர்தலிங்கத்தின் ஆசனத்தில் அமர்ந்துள்ளார்.

## "உழைக்கும் வர்க்கம் ஒன்று நாட்டைவிட்டு ஓடும் நிலை"-அஸீஸ்

"பரம்பரை பரம்பரையாக இந்நாட்டின் வளர்ச்சிக்குப் பாடுபட்டு வரும் இந்திய வம்சாவழியினருக்கு அரசு தக்க பாதுகாப்பு அளிக்கத் தவறியமை பெரும் வேதனைக்குரியது. இந்நாட்டில் அடிக்கடி தூக்கிய வன்செயல்களால் பெரிதும் இந்திய வம்சா வழியினரான தோட்டத் தொழிலாளர்களே பாதிக்கப்பட்டனர். உலகில் பலவிதமான புரட்சிகளும், கிளர்ச்சிகளும் வெடித்துள்ளன. ஆனால் உழைக்கும் வர்க்கம், நாட்டைவிட்டு வெளியேறும் நிலைக்கு வரக்கூடிய அளவுக்கு இங்கேதான் வன்செயல்கள் இடம்பெற்றுள்ளன" என இ.தொ.காங்கிரஸ் தலைவர் ஜனாப் ஏ. அஸீஸ் கூறினார். ஏகாதிபத்தியத்தின் அடிவருடியான ஜெயவர்த்தனா அரசிடம் திரு அஸீஸ் உழைக்கும் வர்க்கத்திற்கு பாதுகாப்பு கேட்கின்ற அளவுக்கு தொழிற் சங்கத் தலைவராய் உள்ளமையே இன்றைய தொழிலாளவர்க்கத்தின் சாபக்கேடு. இப்படியான தலைமைகளைத் தோற்கடிக்காமல் என்றுமே விடிவில்லை.

## பரீட்சைக்கு தோற்றவிடில் பல்கலைக்கழகம் மூடப்படும்:-

மட்டக்களப்பு பல்கலைக் கழகத்தில் 12ம் திகதி டிசம்பர் மாதம் நடைபெறவிருக்கும் பரீட்சைக்கு மாணவர் தோற்றவிடில் மேற்படி பல்கலைக்கழகம் மூடப்படும் என உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. உயர்கல்வி அமைச்சின் செயலாளர் ஸ்டான்லி கல்பகே கல்லூரி நிர்வாகத்திற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் "டிசெம்பர் மாதம் 12ம் திகதி நடைபெறும் பரீட்சையை அத்தோடு கல்லூரியைத் தொடர்ந்து நடாத்துவதா அன்றேல் மூடிவிடுவதா என்பது பற்றித் தீர்மானிக்கப்படுமென" அறிவிக்கப்பட்டுள்ளது. சமீபத்திய கலவரத்தினால் பாதிக்கப்பட்டு வந்த மாணவரை மேற்படி கல்லூரியில் அனுமதிக்கவேண்டுமெனவும் தனித்தமிழ் கல்லூரியாக இயங்க வேண்டுமெனவும் மாணவர் பகிஷ்கரிக்கின்றனர்.

## 1984ம் ஆண்டிற்கான பட்ஜெட்டின் மொத்த செலவினம் 5121 கோடி ரூபாவாகவும், பற்றாக்குறை 2315 கோடி 96 இலட்சம் எனவும் நிதி அமைச்சர் சபையில் தாக்கல்:-

1984ம் ஆண்டிற்கான வரவு - செலவு திட்ட மதிப்பீட்டினை நிதி, திட்டமிடல் அமைச்சர் திரு. ரொனிடிமெல் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அடுத்த நிதியாண்டில் ரூபா 2805 கோடி 4 இலட்சம் வருமானமாகவும், ரூபா 5121 கோடி ரூபா செலவாகவும் எதிர்பார்க்கப்படுகின்றது இதன்படி ரூபா 2315 கோடி 96 இலட்சமாகும். அடுத்த ஆண்டின் மதிப்பின்படி 18 கோடியே 97 இலட்சத்து 55 ஆயிரம் ரூபா மேலதிகமாகவும், கல்வி அமைச்சுக்கு 24 கோடியே 27 இலட்சத்து 8 ஆயிரம் ரூபா மேலதிக மாகவும், காணி அமைச்சுக்கு 4 கோடியே 48 இலட்சத்து 18 ஆயிரம் மேலதிகமாகவும் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பட்ஜெட்டில், சாதாரண கடிதம் 60 சதமாகவும், பதிவுத்தபால் 4/- ரூபாகவும், ஏரோகிராம் ரூபா 5 ஆகவும், டெலிபோன் கட்டணம் யுனிட்டுக்கு 90 சதமாகவும் உயர்த்தப்பட்டுள்ளன.

## சைப்பிரஸ்:-

சைப்பிரஸ் துருக்கி இனத் தலைவரான RAUF DENKTASH கோரியுள்ள தனிநாட்டினை, துருக்கி அதிகார பூர்வமாக அங்கீகரித்துள்ளது. நிக்ஸன் ஆட்சிக் காலத்தில் 1974, July ல் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சதியின் காரணமாக துருக்கி இராணுவம் சைப்பிரஸை ஆக்கிரமித்ததும் இன்று தற்காலிகமாக பிளவுபட்டுள்ள சைப்பிரஸினை நிரந்தர மாக பிளவு படுத்தி சோவியத் யூனியனுக்கு எதிரான சக்தி வாய்ந்த அணுவாயுத தளமாக சைப்பிரஸின் பகுதியை பாவிக்கும் ஏகாதிபத்திய சதியாகவுமே RAUF DENKTASH இன் தனிநாட்டுக் கோரிக்கை எழுந்துள்ளது.

"சுதந்திரமடைந்த தொடக்கத்திலேயே நமது கல்விமுறையையும், நிர்வாக முறையையும் மாற்றியமைக்காமல் விட்டது தவறு" — இந்தியப்பிரதமர் இந்திரா.

"தேசிய ஒருமைப்பாட்டிற்கு தடையாக இருக்கும் சாதி, மத, பிராந்திய வேறுபாட்டிற்கு எதிராக நாட்டிலுள்ள சிந்தனையாளர்கள் குரல் கொடுக்க வேண்டும்" எனப் பிரதமர் இந்திரா காந்தி புதுடில்லியில் நடைபெற்ற அறிஞர்கள் மகாநாட்டில் கூறினார். அவர் மேலும் "சுயலாபம் கருதியும், குறுகிய கால நன்மைகளுக்காகவும் நாட்டின் எதிர்கால நலன்களைப் பாதிக்கும் வகையில் சில சக்திகள் நடந்து கொள்ளுகின்றன."

"சுதந்திரமடைந்த தொடக்கத்திலேயே நமதுகல்வி முறையையும், நிர்வாக முறையையும் மாற்றியமைக்காமல் விட்டது தவறு. சுதந்திரப் போராட்டம் பற்றிய வரலாற்றை எமது இளம் தலைமுறையினருக்கு முறையாக எடுத்துச் சொல்லாதது அதைவிடத் தவறு. திரு. நெல்சன் மண்டேலாவுக்கு நாம் ஆதரவளித்த போது யாருமே நாம் தென்னாபிரிக்காவின் உள்விவகாரங்களில் தலையிடுவதாக குற்றம் சுமத்தவில்லை. ஆனால் கபால்கான் கைதானது பற்றி நாம் பேசும் போது அது குறுக்கீடு என்பதாக கூறப்படுகின்றது. அனைத்திலுமே ஆதாயம் காண முயல்வதான மனப் போக்கு மக்களிடையே காணப்படுவதுதான் இன்றைய மிகப் பெரும் அபாயம் ஆகும்" எனவும் குறிப்பிட்டார்.

## இரசாயனப் பொருட்கள், டெலிவிஷன் ஆறு:-

வெசுலியான் மத்திய மகாவித்தியாலயத்தில் இருந்து இரசாயனப் பொருட்கள், தொலைக்காட்சிப் பெட்டி, ரெனியோ தட்டச்சு இயந்திரங்கள் ஆகியன 30.10.86ல் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளன. சாதாரண உடையில் இருந்து 6 பேர் இக் கொள்ளையை நடாத்தினர்.

"வெளிநாட்டுப் பொலிஸ் நிலையங்களுடன் தேவையேற்படின் நேரடித் தொடர்புகொண்டு உதவிகோரமுடியும்".

சர்வதேச பொலிஸ் பிரிவு.

நாடுகளுடனான பொலிஸ் தொடர்புகள் மூலம் இந்தச் செயல்களைத் தடுக்கவும் சட்டத்திற்கு சவால் விடுவோரை கைது செய்யவும் சர்வதேசிய பொலிஸ் பிரிவு (இன்டர் போல்) தேசிய இரு மகாநாட்டில் முடிவு எடுக்கப்பட்டது. பல நாடுகளின் பொலிஸ் மா அதிபர்கள் கலந்துகொண்ட இப்பிரான்சு மகாநாட்டில் பல "அந்தரங்க" முடிவுகளும் எடுக்கப்பட்டன.

பிரச்சினைகள் ஏற்பட்டால் வெளிநாடுகளின் பொலிஸ் திணைக்களங்களுடன் நேரடித் தொடர்புகொண்டு உதவிகள் கோரமுடியும் என்றும் தீர்மானிக்கப்பட்ட இம் மகாநாட்டில், ஒரு நாட்டில் தேடப்படுபவர்கள் மற்றொரு நாட்டுக்குச் சென்றிருந்தால் அந்த நாட்டின் பொலிஸாருடன் நேரடி தொடர்பு கொண்டு மேல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும், இது மட்டுமன்றி சர்வதேச கடத்தலைத் தடுப்பது தொடர்பாகவும் பல முடிவுகள் எடுக்கப்பட்டன.

## தமிழக மாணவர் பேரவை சுவரொட்டிகள்.

" மட்டக்களப்பு சிறையில் இருந்து" விடுதலைப் போராளிகளை மீட்டு தமிழகத்திற்கு கொண்டு வந்து சேர்த்த விடுதலைப் போராளிகளையும், சிறையில் இருந்து கொண்டு வரப்பட்ட விடுதலைப் போராளிகளையும் வரவேற்கின்றோம்" என்று சிவப்பு, கறுப்பு நிறங்களிலான தமிழ்நாடு மாணவர் பேரவையின் சுவரொட்டிகள் யாழ் நகரெங்கும் ஒட்டப்பட்டுள்ளன. இந்தச் சுவரொட்டியில் மேலும் இந்தச் சிறையுடைப்பின் போது உதவி செய்த தியாகிகளுக்கும், இயக்கங்களுக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இயக்க நபர் சோமசுந்தரம் செல்வேந்திரம் கைது.

தேடப்பட்டு வருகின்றனர் என்று வர்த்தமானி பட்டியலில் இருந்த சோமசுந்தரம் செல்வேந்திரம் அல்லது நனி (26 வயசு) என்பவரை வல்வெட்டித்துறைப் பொலிசார் கைது செய்து பலாலி இராணுவத்தினரிடம் ஒப்படைத்துள்ளனர். தொண்டமானாறு பகுதியைச் சேர்ந்த இவர் 24.10.1983 திங்கள் மாலை 4 மணியளவில் பொலிகண்டி வீதியில் வைத்துக் கைதானார். இவர் இந்தியாவில் திருமணம் நடந்தபின் இரண்டு மாதத்தில் இலங்கை வந்த போதே கைதானார்.

## இலங்கைத் தமிழர்கட்கு ஏற்பட்ட இன்னல்கள் குறித்து தமிழக சட்டசபையில் இரங்கல் தீர்மானம்.

இலங்கையில் பல்வேறு வகையில் துயரத்துக்குள்ளாகியிருக்கும் தமிழர்களுக்கு ஆழ்ந்த அனுதாபமும் வருத்தமும் தெரிவிக்கும் இரங்கல் தீர்மானம் ஒன்று தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. 24.10.83 திங்கள் இடம்பெற்ற இவ் இரங்கல் தீர்மானம் சபையில் எடுக்கப்பட்டபோது, சபாநாயகர், முதலமைச்சர், அமைச்சர்கள், மற்றும் உறுப்பினர்களில் ஆண்கள் கறுப்புச் சட்டையும், பெண்கள் கறுப்புச் சேலையும் அணிந்திருந்தனர்.

இவ் இரங்கல் தீர்மானத்தில் சபாநாயகர் ராசாராம் " இலங்கையில் வாழும் இந்தியத் தமிழர்கள், இந்திய வம்சாவழித் தமிழர்கள், இலங்கைத் தமிழர்கள் ஆகியோர் கடந்த 35 ஆண்டுகளாக அவ்வப்போது பல இன்னல்களுக்கு ஆளானார்கள். கடந்த ஜூலை மாதம் தொடர்ந்து இனவெறியர்களாலும், பாதுகாப்புபடையினராலும் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, சூறையாடுதல், தீவைத்தல், தீங்கிழைத்தல் போன்ற கொடுஞ் செயலுக்கு ஆளாக்கப்பட்டிருப்பதை பேரவை ஆழ்ந்த கவலையுடன் உயிரிழந்தவர்களுக்கு வீர அஞ்சலி செலுத்துகின்றது" என்றார்.

இயந்திரங்கள் அபகரிப்பு:-

பூநகரிக்கும் கேரதீவிற்கும் இடையில் இருக்கும் மகா தேவா தாம்போதியில் சேவையில் ஈடுபடும் "இயந்திரப் பாதை" யில் இணைக்கப்பட்டிருந்த மூன்று இயந்திரங்கள் துப்பாக்கி முனையில் அபகரிக்கப்பட்டுள்ளன. இச்சம்பவம் 30.10.85 அதிகாலை 2 மணியளவில் நடைபெற்றது. இனம் தெரியாத இளைஞர் கோஷ்டி ஒன்று காவலாளியைப் பயமுறுத்தி இத் துணிகரச் செயலைச் செய்துள்ளன.

அரசியல் தஞ்சம் கோரி இருந்தார் என கைதானவருக்கு பிணை:-

சுவிற்சலாந்து நாட்டில் அரசியல் தஞ்சம் கோரி இருந்தாரென கொக்குவில் சம்பியன் லேனைச் சேர்ந்த ஒருவர் கோட்டை கூட்டு நீதிவான் திரு இஸ்மாயில் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். மேற்படி நபர் சுவிற்சலாந்திற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் போய் ஹோட்டல் ஒன்றில் வேலை செய்து கொண்டு அரசியல் தஞ்சம் கோரி இருந்தாரென்று கைது செய்யப் பட்டார். இவருடைய விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு அவரின் செலவிலேயே நாடு கடத்தப்பட்டவர் என சந்தேகத்தின் பேரி லேயே கட்டுநாயக்கா விமானநிலையத்தில் வைத்து கைதா னார்.

பருத்தித்துறை – யாழ். பஸ்ஸில் டைனமைட் பெட்டி:-

பருத்தித் துறையிலிருந்து யாழ்ப்பாணம் சென்ற பஸ் வண்டி (C.T.B) ஒன்றில் டைனமைட் அடங்கிய பெட்டி ஒன்றை பொலிசார் கைப் பற்றினர். இரகசியத் தகவலைத் தொடர்ந்தே பொலிசார் குறிப்பிட்ட இடத்தில் வைத்து மறித்து சோதனை நடாத்தியபோது கைப்பற்றினர். டைனமைட் பெட்டி யுடன் அப்பொழுது பஸ்ஸில் இருந்த 25 இற்கும் மேற்பட்ட பிரயாணிகளுடன் பஸ் திருப்பப்பட்டு விசாரணை நடாத்தியும் யாரும் பெட்டியை உரிமைகோரவில்லை.

# தமிழ் மக்களுக்கென பாட்டாளி வர்க்கக் கட்சி

முழுமனித சமுதாயத்திற்கான பண்டங்கள் அனைத்தையும் உற்பத்தி செய்யும் தொழிலாளவர்க்கம் மற்றைய எல்லாவர்க்கங்களையும் விட சக்திமிக்கதாகத் தோன்றுவதற்குக் காரணம் உற்பத்தியோடு அது வைத்திருக்கும் உறவுதான். உற்பத்திச் சாதனங்களை நிர்வகிக்கும் தன்மையும் அதற்காக செலவிடும் சக்தியும் தொழிலாளவர்க்கத்திடமிருந்தே எடுக்கப்படுகின்றது. தொழிலாளியானவன் முதலாளியால் ஒரு உற்பத்திக் கருவியாகவே பாவிக்கப்படுகின்றான். சுருங்கச் சொன்னால் தொழிலாளி ஒரு பேசும் கருவியே.

இந்தப் பின் தங்கிய ஈழத்து முதலாளித்துவ வர்க்கத்தால் தள்ளப்பட்டுள்ள தொழிலாளிவர்க்கம் எல்லாவழிகளிலும் முதலாளித்துவ வர்க்கத்தால் சுரண்டப்பட்டு இன்று உயிர் வாழ்வதற்காக மட்டும் உழைக்கும் கட்டத்தையும் விட்டு அதையும் மீறிச் சென்று விட்டது.

முதலாளித்துவத்தின் மனிதநேயமற்ற உற்பத்திமுறை இன்றைய காலகட்டத்தில் எத்தனையோ மில்லியன் கணக்கான மக்களைப் படுபஞ்சத்திற்கு தள்ளிவிட்டுள்ளது. இவ்வுற்பத்திமுறை அழிக்கப்பட்டு முழு மனித நேயம் கருதி உற்பத்திசெய்யும் உற்பத்திமுறை கொண்டு வரப்படல் வேண்டும். இன்றைய சகாப்தமானது இரண்டு பெரும்பகையான வர்க்கங்களைத் தோற்றுவித்திருக்கின்றது. அதாவது இன்றைய நெருக்கடி சூழ்ந்த காலகட்டமானது சுரண்டும் சிறுபான்மை முதலாளித்துவ வர்க்கத்திற்கும், சுரண்டப்படும் பெரும்பான்மை தொழிலாளவர்க்கத்திற்கும் இடையிலான தீராப்பகைமையை தோற்றுவித்து வளர்த்துள்ளது. இனி எந்தவகையான இணக்கமும் காணமுடியாது என்பதன் விளைவாகவே ஆளும் முதலாளிவர்க்கம் ஆளப்படும் தொழிலாளவர்க்கத்தை ஒடுக்குகின்றது. மாக்ஸின் கருத்துப்படி அடக்குமுறைக்கெதிராக கிளர்ந்தெழும் தொழிலாள வர்க்கத்தை ஒடுக்குவதற்கான ஓர் விசேட உறுப்பாக

பரிணமமடைந்ததே அரசு இயந்திரம்.

பலசகாப்த வரலாறுகளையும் அதனால் எழும் சமூக கட்டமைப்புகளையும் ஆராய்ந்த மார்க்ஸ் "எவ்வரலாற்று அடிப்படையிலும் எச்சகாப்தத்திலும் சரி பாட்டாளி வர்க்கம் ஆளும் வர்க்கத்தால் சுரண்டப்பட்டும் ஒடுக்கப்பட்டும் வந்துள்ளது. இன்றைய முதலாளித்துவ வர்க்க சகாப்தத்தில் அதீத சுரண்டலும் ஒடுக்குமுறையும் அசுரத்தன்மை ஆகி விட்டதனால், இனி தொழிலாள வர்க்கம் முதலாளித்துவ வர்க்கத்தை அழித்தொழிக்காமல் ஒரு போதும் விடுதலையடைய மாட்டாது" என்பதை ஆணித்தரமாக எடுத்துரைத்தார்.

"ஆயுத மேந்திய ஆட்களைக் கொண்ட தனிவகைப் படைகளும், சிறைக்கூடங்களும் இன்ன பிறவும் கொண்டு ஒடுக்கிவரும் ஆளும் முதலாளித்துவ வர்க்கத்திற்கும், தொழிலாள வர்க்கத்திற்கும் இடையில் இனிச் சமரசம் கிடையாது" என்பதே மார்க்ஸினதும், எங்கெல்ஸினதும் முடிவு. மார்க்ஸினது போதனைக்கு என்ன நேர்ந்து வருகின்றதோ அதுவேதான் விடுதலைக்காக போராடும் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களுடைய புரட்சிகரச் சிந்தனையாளர்களுக்கும், தலைவர்களுமானோரின் போதனைகளுக்கும் வரலாற்றில் அடிக்கடி நேர்ந்துள்ளது. ஒடுக்கும் வர்க்கங்கள் மாபெரும் புரட்சியாளர்களை அவர்களுடைய வாழ்நாளில் ஓயாமல் வேட்டையாடின. அவர்களுடைய போதனையின் மீது கட்டுக்கடங்காத காழ்ப்பும், வெறித்தனமான வெறுப்பும் கொண்டு கயமையான பொய்ப்பிரசார அவதூறுகளைச் சுமத்தின. அவர்கள் இறந்த பிறகு அவர்களை அபாயமற்ற பூசையறைப் படங்களாக்கி வழிபாட்டுக்குரியோராக்கவும், ஓரளவு அவர்களுடைய பேர்களை புனிதத் திருப்பெயர்களாக்கவும் முயற்சிகள் செய்யப்படுகின்றன.

ஒடுக்கப்பட்ட வர்க்கங்களை "ஆன்மதிருப்தி" பெறச் செய்வதும், அவற்றை ஏமாற்றுவதும் அதே போதில் புரட்சிப் போதனையிடமிருந்து அதன் சாரப் பொருளைக் களைந்து

புரட்சி முனையை மழுங்கடித்து; அதைக் கொச்சைப்படுத்துவதுதான் இந்த முயற்சிகளின் நோக்கம். முதலாளித்துவ வர்க்கத்தாரும் தொழிலாள இயக்கத்திலுள்ள சந்தர்ப்பவாதிகளும் இன்று மார்க்சீயத்தை இவ்வாறு பதனம் செய்வதில் ஒன்றுபடுகின்றனர்கள். இந்தப் போதனையின் 'புரட்சித் தன்மை இதன் புரட்சி ஆன்மாவை அவர்கள் விட்டொழிக்கவோ, மூடிமறைக்கவோ, திரித்துப் புரட்டவோ செய்கின்றார்கள். மார்க்சியத்தை திரித்துப் புரட்டுவது என்றுமில்லாத அளவிற்கு மலிந்திருக்கும் இப்படிப்பட்ட நிலைமையில் மெய்யாகவே மார்க்ஸ் சொன்ன "முதலாளித்துவ வர்க்கத்திற்கும் தொழிலாள வர்க்கத்திற்கும் இடையில் இனி இணக்கம் காணமுடியாது" என்பதன் பொருள் குறித்து நாம் ஆணித்தரமான தொழிலாளவர்க்க நிலைப்பாட்டிற்கு வராமல் இருந்துவிட முடியாது.

தமிழீழப் போராட்டத்தில் குதித்துள்ள நாம் கலப்படமற்ற தொழிலாளவர்க்க நிலைப்பாட்டை எடுத்தே தீரவேண்டும். ஆனாலும் முதலாளித்துவ வர்க்கம் ஒருபோதும் சொத்துடைமைகளை பொதுவுடைமையாக்காது. பதிலாக மூலதனக்காரரின் ஆதிக்கத்தையும் அவர்களின் சுரண்டலையும் நியாயப்படுத்தி ஒடுக்குதலை தொழிலாகக் கொள்ளும். இதேபோலத்தான் கலப்பட சோஷலிஸ்டுகளும், குட்டி பூர்சுவாக்களும் சுரண்டல் அமைப்புகளையும் முதலாளித்துவத்தின் அதே சட்டதிட்டங்களையும் தூக்கி எறியத் திடப்படாத பழைமைவாதிகளே. தொழிலாள வர்க்கத்திற்குச் சொந்தமான அதன் உழைப்பிலேயே வாங்கிய மூலதனம் அனைத்தும் தொழிலாளிக்குச் சொந்தமாக வேண்டும். மூலதனத்தை இடுபவர் முதலாளியாய் இருப்பினும் அது காலாகாலமாக தொழிலாளவர்க்கத்திடமிருந்து உறிஞ்சிய பணக்குவியலே. அது எவ்வழியினும் நோக்கினால் தொழிலாளவர்க்கத்திற்குச் சொந்தமானதே தான்.

முதலாளித்துவ உற்பத்தி முறையில் உற்பத்திப் பங்கை வகிக்கும் வர்க்கம் தொழிலாளவர்க்கமே தான். காலா

காலமாக தொழிலாள வர்க்கத்தின் உழைப்பால் தோற்று விக்கப்பட்ட உற்பத்தி ஒன்று இப்போ முதலாளித்துவ வர்க்கம் தன்னுடைய தென்று கூறும் இம்மூலதனம். முத லாளித்துவம் இம் மூலதனத்தை வெறும் லாபம் கருதும் நோக்குடன் உற்பத்திக்கு ஈடுபடுத்துவதால் முழுமனித தேவையையும் பூர்த்தி செய்யவில்லை. ஆனால் மூலதனம் தொழிலாளவர்க்கத்தின் பொதுவுடமையாகும் போது முழு மனித தேவை கருதியே உற்பத்தி செய்யும். இவ் உற்பத்தி லாபநோக்குக்காகச் செயல்படுவதல்ல. இதன் பிரகாரமே மக்களின் வாழ்க்கைத்தரமுயரும். ஆகவே தொழிலாள வர்க்கத்தின் கையில் உற்பத்திச் சாதனங்கள் மாற்றப்பட வேண்டும். எச்சந்தர்ப் பத்திலும் உற்பத்தியின் பங்கை வகிப்பது தொழிலாளவர்க் கமே.

ஆகையால் தான் உற்பத்திக்கருவிகள் அனைத்தும் தொழிலாளவர்க்கத்தின் உரிமையாக்கப்படல் வேண்டும். தனியுடமை அனைத்தும் பொதுச் சொத்தாக்கப்படல் வேண்டும். இதைச் செய்ய வல்லது, கலப்படமற்ற பாட்டாளிவர்க்கத்தலைமை யிலுள்ள கட்சி ஒன்றே தான். தமிழீழத்தில் இருக்கும் மூலத னம் அனைத்தும் பொதுவுடமையாக்கப்படமுடியுமானால் தொழி லாள வர்க்கக் கட்சியொன்றை நிர்மாணித்தே தீரவேண்டும். வர்க்க சமரசவாதம் பேசும் கலப்பட சோஷலிஸ்டுக்களும், குட்டி பூர்சுவாக்களும் ஒருபோதும் இந்நிலைப்பாட்டிற்கு வர மாட்டார்கள். "பாட்டாளிவர்க்கம் முதலாளித்துவ வர்க்கத்தினை புரட்சிகரமாக வீழ்த்துவதற்காகப் போராடுகின்றது. குட்டி பூர்சு வாக்கள் ஏகாதிபத்தியத்தை சீர்திருத்தப்பாணியில் மேம்படுத்தவும் அதற்குத் திகவமைத்துக் கொள்ளவும் அதேபோதில் அதற்குக் கீழடங்குவதற்கும் வேண்டியும் போராடுகின்றது". தமிழ்மக்களுக் கென்றொரு சுகீகரமான சகாப்தம் மலரவேண்டுமாயின் அது குட்டி பூர்சுவாத்தன்மை கொண்ட இயக்கங்களையும், கலப்பட சோஷலிசம் பேசும் திரிபுவாத இயக்கங்களையும் தமிழ்த்தி

யிலிருந்து அகற்றித் தமக்கென ஒரு பாட்டாளிவர்க்கக் கட்சியைப் படைக்கவேண்டும். பாட்டாளி வர்க்கம் தனக்கென்று ஒரு சுயாதீனமான கட்சியை உருவாக்காமல், ஆட்சிப் பொறியமைப்பை நொருக்கிக் கைப்பற்றாமல் தனது சொந்த நோக்கத்தை நிறைவேற்ற முடியாது. அதாவது கலப்பட சோஷலிஸ்டுகள், குட்டி பூர்சுவாக்கள் மற்றும் இதர பிற்போக்குவாதிகளின் கீழ்ப்படிவுக்கு உட்படாமல் சுயாதீனமான உறுதியான பாட்டாளிவர்க்க கட்சி ஒன்றால்தான் பொதுவுடமை செயல்பாடுகள், திட்டங்களை நிறைவேற்ற முடியும்.

வர்க்கங்களுக்கிடையில் இணக்கம் உண்டாகமுடியாது என்பதன் உண்மைப் பொருளின் பக்கம் சாயாமல் 1917ம் ஆண்டு புரட்சியின் போது எல்லா சோசலிஸ்ட் புரட்சியாளர்களும், மென்சவிக்குக் கட்சியினரும் வர்க்கங்களுக்கிடையே இணக்கம் உண்டாக்கலாம் என்ற குட்டி முதலாளித்துவ தத்துவத்துடனே சரிந்து சென்றுவிட்டனர். அப்போது கெரன்ஸ்கி அரசாங்கம் குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதிகளின் தலைமையின் காரணமாய்; சோவியத்துக்கள் ஏற்கனவே ஆற்றல் பற்றவும் முதலாளித்துவ வர்க்கம் அவற்றைக் கலைக்க இன்னமும் பலம் பெறவும் இருந்த தருணத்தில் புரட்சிகர பாட்டாளிவர்க்கத்தின் மீது அடக்குமுறையை கட்டவிழ்த்து விட்டது. அதாவது சோசலிஸ்ட் புரட்சியாளர்களையும், மென்சவிக்குகளையும் கொண்டகெரன்ஸ்கி அரசாங்கம் வர்க்க சமரசம் செய்யலாம் என்ற தப்பெண்ணம் கொண்டு சோசலிச வேலைத்திட்டத்தை நிர்மாணிக்க முடியாது போய்விட்டார்கள்.

இதேபோலத்தான் சோசலிசத்தைப் பதனம் செய்யும் எந்தக்கட்சிகளும், கலப்பட சோசலிஸ்டுகளும் ஒரு போதும் தொழிலாளவர்க்கத்தின் விடுதலையை வென்று கொடுக்கமாட்டார்கள். ஆகையால்தான் தமிழ் மக்களுக்கென்று ஓர் பாட்டாளிவர்க்கக் கட்சியொன்று நிர்மாணிக்கப்

பட்டாளம் மாத்திரமே தான் பாட்டாளிவர்க்கம் தனது சொந்த நோக்கத்தை நிறைவேற்றமுடியும். மற்றைய கலப்பட சோசலிஸ்டுகளுக்கு கீழ்படியாமல், மற்றைய கட்சிகளை தனக்குக் கீழ்படியச் செய்ய வேண்டும்.

தொழிலாள வர்க்கத்திற்கும் முதலாளித்துவ வர்க்கத்திற்கும் இணக்கமென்பது ஒருபோதும் இல்லை என்ற உண்மைப் பொருளின் காரணமாக சுயாதீனமான பாட்டாளிவர்க்கக் கட்சி வேண்டும். அது சர்வதேச பாட்டாளிவர்க்க கட்சியாக அமைக்கப்பட வேண்டுமென்பதற்காகவே 1865 ம் ஆண்டு முதலாம் அகிலத்தை மாக்ஸ் (சர்வதேச பாட்டாளி வர்க்கக் கட்சியை) நிர்மாணித்தார். இதை முற்றுமுழுதாக ஏற்றுக்கொண்டு ஏங்கல்சினால் 1889 ம் ஆண்டு இரண்டாம் அகிலம் நிறுவப்பட்டது. ஏங்கெல்சின் மறைவுக்குப் பின்னர் இரண்டாம் அகில பிரபல தலைவர்களில் ஒருவரான காலின் கவுட்ஸ்கி வர்க்கங்களுக்கிடையே இணக்கம் காணமுடியுமென்ற தப்பெண்ணங்களில் ஒட்டிக்கொண்டு இரண்டாம் அகிலத்தை சீர்குலைத்ததோடு இரண்டாம் அகிலத்தை ஆட்டிப்படைக்கும் மிகப்பெரிய கட்சியாக விளங்கிய ஜேர்மன் S.P.D யையும் படுபிற்போக்கான பாதைக்கு இழுத்துச் சென்றார். அன்று ஏராளமான சந்தர்ப்பவாதிகள் தொழிலாள வர்க்கத்திற்கும் முதலாளித்துவ வர்க்கத்திற்கும் இணக்கம் உண்டாக முடியுமென்ற மாக்சியத்திற்கு முற்றிலும் புறம்பான கருத்தை ஊசலாட வைத்ததுமே அன்றைய விஸ்வரூபமடைந்த பொருளாதார நெருக்கடிக்கால கட்டத்தில் உலகத்தொழிலாள வர்க்கம் ஆட்சியைக் கைப்பற்றமல் போனது. வல்லரசுகளின் நாடுபிடிக்கும் போட்டா போட்டி 1914-1917 ஏகாதிபத்திய யுத்தத்தை மூண்டெழச் செய்ததற்குக் காரணம் இச் சந்தர்ப்ப வாதிகள் கொண்டிருந்த "வர்க்கங்களுக்கிடையே இணக்கம்" உண்டாக்கலாம் என்ற படுபிற்போக்கான கொள்கையே.

ஏன் இலங்கையில் தொழிலாளவர்க்கத்திற்காகப்

போராடத் தலைப்பட்ட கம்யூனிஸ்களான மொஸ்கோ சார்பு கம்யூனிஸ்ட் கட்சியும், சமசமாஜ கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஆட்சி நடாத்தின. முதலாளித்துவ ஸ்ரீலங்கா அரசாங்கத்துடன் ஆட்சி நடாத்தி முதலாளித்துவவாதிகளால் மேலும் நசுக்கப்பட்டார்களே ஒழிய வேறொன்றுமல்ல. N.M. பெரேராவும், பீற்றர் கெனமனும் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை (ஆளும் முதலாளித்துவத்தை) மாற்றிவிடலாமென்று தப்புக் கணக்குப் போட்டார்கள். ஆளும் முதலாளித்துவம் ஒரு போதும் மனம் மாறாது பதிலுக்கு தொழிலாளவர்க்கத்தின்பாலுள்ளவர்களைத்தான் மாற்றும். எப்பொழுதும் விழிப்புணர்ச்சியுடையதும், புத்திசாதுரியமானதுமான முதலாளித்துவ வர்க்கம் தானகவே மாற்றம் அடையப் போவதுமில்லை மாற்றவும் முடியாது என்பதே வரலாறு புகட்டும் பாடமும்; மாக்சியமும்.

முதலாளித்துவத்தை தூக்கியெறிந்து அந்த அரசுப் பொறியமைப்பை நொருக்கி; தொழிலாள வர்க்கம் ஆட்சியைக் கைப்பற்றினால் ஒழிய சோஷலிச வேலைத்திட்டத்தை செய்ய முடியாது. தமிழீழப் போராட்டத்தில் குதித்துள்ள நாம் கெட்டியான சுயாதீனமான பாட்டாளிவர்க்கக் கட்சியை உருவாக்கி, பூர்சுவாக்களுடன் சமரசம் செய்யாமல் தொழிலாள வர்க்கமாகிய நாம் தனித்து நின்று போராட வேண்டும். நடுத்தர வர்க்கமனோபாவமுள்ள குட்டி பூர்சுவாக்களின் பெரும்பகுதி பாட்டாளி வர்க்கத்தின் பக்கமே தள்ளப்படுவார்கள். அவர்களை பாட்டாளி வர்க்கத் தலைமையின் கீழ் அணிதிரட்ட வேண்டும். எமது போராட்டத்தின் போது எமது வர்க்கத்திலுள்ள இந்திய உபகண்டத் தொழிலாள வர்க்கத்தினதும், உலகத் தொழிலாள வர்க்கத்தினதும் ஆதரவையும் ஆன்மீகப் பிணைப்பையும் ஏற்படுத்த வேண்டும். இதுவே எமது விடுதலையை வென்றெடுப்பதற்கான சரியான வழியாகும்.

1917ம் ஆண்டு ஒக்ரோபர் புரட்சியின் போது இங்கிலாந்தும், பிரான்சிலிருந்தும் வரவிருந்த ஆயுதங்களை


கப்பல் துறைமுகத் தொழிலாளர்களும், புகையிரத தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்து தடுத்து விட்டனர். இதனாலேயே தான் ரஷ்யப் புரட்சி வெற்றி பெற்றது.

வெற்றி அடைந்த நிக்கராகுவாவை அப்புரட்சியைத் தோற்கடிப்பதற்கு அமெரிக்க ஏகாதிபத்தியம் ஹொண்டுராசில் (HONDURAS) படைகளைக் குவிப்பதுமாய் நாலா கரையும் யுத்தக் கப்பலை நிலைகொண்டிருக்கிறது. இவ்வளவு பேராபத்தின் மத்தியில் நிக்கராகுவா அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்து போராடுகின்றதென்றால் அண்டை நாட்டுத் தொழிலாள வர்க்கத்தினதும், இதர நாட்டுத் தொழிலாள வர்க்கத்தினதும் ஊசலாட்டமற்ற ஆதரவேதான்.

ஆதலால் தான் தமிழ் மக்களுக்கென்று ஓர் பாட்டாளி வர்க்கக் கட்சி நிர்மாணிக்கப்பட்டு அது உலகத் தொழிலாள வர்க்கத்தின் ஆதரவோடு, ஆத்மீகப் பிணைப்போடு ஒன்றியமாக வேண்டும். இதுவே தமிழ் தொழிலாள வர்க்கத்தின் கடமையாகும்.

# யசீர் அரபாத்

கூடிச்சேரா நாடுகளின் வெளிநாட்டு மந்திரிகள் மகாநாடு P.L.O வின் உண்மையான தலைவர் யசீர் அரபாத் என்பதை அங்கீகரித்துள்ளது. அறிக்கையில் மேலும் குறிப்பிடுவது, இரண்டு அராபிய நாடான சிரியாவும், லிபியாவும் பலஸ்தீன விடுதலை இயக்கத்தைத் தாக்குவது கவலைக்குரிய விடயமாகும். யசீர் அரபாத் கடந்த காலங்களில் இப்போதையதைப் போன்ற பெரும் நெருக்கடியை முகம் கொடுக்கவில்லை. உலகத்தில் எந்த சக்தியும் ஒரு புரட்சியை நிர்மூலமாக்க முடியாது. பலஸ்தீனப் புரட்சியின் சவக்குழியைத் தோண்டுபவர்களை சரித்திரம் மறக்கவோ மன்னிக்கவோ போவதில்லை.




1) "Struggle for Freedom"
2) "Der Weg zur Freiheit"


# தோழர்களே,

தமிழ் ஈழப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் நாம் எமது போராட்டத்தை நெறிப்படுத்தவும், சர்வதேச முற்போக்குச் சக்திகளை எம்பால் அணிதிரட்டவும் உலகின் புரட்சிகர வரலாறுகளை கரிசனையோடு அறிந்து கொள்வது அவசியமாகும். "தமிழ் ஈழ சர்வதேச சம்பந்தக் குழு"வின் செயல் நிதிக்காகவும், செய்திப்படிப்பணவுக்காகவும் "நமீபியா", "எஸ்சல்வடோர்" புரட்சி வரலாறுகளை டிசம்பர் மாதம் 17ந் திகதி திரையிடுகின்றோம். ஆதரவு நல்குங்கள்!

டிக்கட் விபரங்கட்கு தொடர்பு கொள்ளுங்கள்:-
Tel. 0711-6498518.

## இடம் - kino atelier 1 STUTTGART

# முதலாளித்துவம் ஏன் நெருக்குவாரத்தில்




ஜயவர்த்தனவிற்கு மேலும் கடன் கிடைக்கப் போவதில்லை. செப்டம்பர் மாதத்தில் வாஷிங்டனில் கூடிய சர்வ தேச நாணய சபை (IMF) 1984 ஆம் ஆண்டிற்கான நிதியைச் சேகரிக்கத் தவறிவிட்டது. மிகக் கடுமையான வாக்குவாதங்களின் பின்னர் இம்முடிவு வெளியிடப் பட்டது. இதைத் தொடர்ந்து மூன்றவது உலக நாடுகளுக்கான கடனை வெட்டுவதற்கு சர்வதேச நாணய சபை நிர்ப்பந்திக்கப்பட்டுவிட்டது.

இம்முடிவானது சர்வதேச கடன் தொல்லைக்கு மேலும் எண்ணெய் வார்த்துள்ளது. 1944 ஆம் ஆண்டு யூலை மாதம் ஏகாதிபத்தியத்தின் நெருக்கடியிலிருந்து மீள்விக்க ஸ்தாபிக்கப்பட்ட சர்வ தேச நாணய சபை அதன் மிகப் பெரிய நிதிச் சிக்கலினுள் அகப்பட்டுவிட்டது. சர்வதேசரீதியில் 'கேயின்சின்' பொருளாதாரத்தத்துவம் வந்தறெட்டடைந்து விட்டது. கடன் வசதிகளை அதி-

-கரிப்பதன் மூலம் முதலாளித்துவத்தினை ஸ்திரப்படுத்த முடியும் என்ற கெயின்ஸினது தத்துவம் பொய்த்து விட்டது. பிரேசில், ஆர்ஜன்டீனா, மெக்ஸிகோ, முதற் கொண்டு பல மூன்றாம் உலக நாடுகள் கடனுக்கான — முதலையோ, வட்டியையோ செலுத்த முடியாத சிக்கலினுள் நுழைந்து விட்டன. சர்வதேச வங்கிகளின் நெருக்குவாரமும், பன்னாட்டு தொழில் மூலதனத்தின் நெருக்கு வாரமும் ஒருபுறமாகவும் உள்நாட்டு தொழிலாள வர்க்கத்தின் நெருக்குவாரம் மறுபுறமுமாகவும் ஆட்சி நடாத்த முடியாது ஆட்சியமைப்புகள் திணறுகின்றன.

முதலாளித்துவமானது மிக முக்கியமான அடித்தளமான ஒன்றின் மீதே- அதாவது தொழிலாள வர்க்கத்திலிருந்து உபரிமதிப்பை பிடுங்குவதன் மீதே, எழுந்து நிற்கின்றது. மதிப்போ, உபரிமதிப்போ, தனிப்பட்ட கடன் கொடுப்பனவினூடும் மீளப் பெறுதலாலும் ஏற்படக்கூடிய ஒன்றல்ல. மாறாக இக்கடன்களுக்கு வட்டி பெறப்படுகின்றது. வட்டி என்பது உபரி மதிப்பே. பாரிய அளவில் காலனித்துவ, அரைக்காலனித்துவ நாடுகளுக்கு 1970 களில் அளிக்கப்பட்ட கடன்கள் வட்டியைப் பெறும் நோக்கிற்காக மட்டுமே அளிக்கப்பட்டன. வட்டி என்ற உபரிமதிப்பானது மற்றைய உபரி மதிப்புகளைப் போன்றே உற்பத்திச் செயல் முறையின் போது மட்டுமே தோற்றுவிக்கப்படுவதாகும். சர்வதேச நாணய சபையின் அங்கமான உலக வங்கியினது புளுகித்தனமான 'அபிவிருத்தி திட்டங்கள்" மூன்றாவது உலக நாடுகளில் உற்பத்தி சாதனங்களை அபிவிருத்தி செய்யாததன் காரணமாகவே மூன்றாவது உலக நாடுகள் வட்டி என்ற உபரிமதிப்பை உற்பத்தி செய்ய முடியாமல் போயின. இதன் காரணமாகவே இன்று பிரேசில் முதல் கொண்டு

இலங்கையிறக மூன்றாம் உலக நாடுகள் கடனுக்கான வட்டி செலுத்த முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. ஏகாதிபத்தியத்தின் நலன்களைப்பாதுகாக்கும் சர்வதேச நாணய சபையின் இந்த இரட்டை-முரண்பாட்டுக்கொள்கையானது ஈற்றில் முதலாளித்துவ அமைப்பு முறைக்கெதிராகவே இன்று திரும்பியுள்ளது. "கெயின்ஸினது கொள்கைக்கு நன்றிகள்! இரண்டாவது உலகமகாயுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர பாரிய அளவில் காலனித்துவ நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட போலிமுதலு (FICTITIOUS CAPITAL)க்கும் நன்றிகள்! இம்"முதல்" போலியானது. ஏனெனில் அவை உண்மைப் பெறுமதியை கொண்டிருக்கவில்லை (இதன் காரணமாகவே 1971 ஆகஸ்ட் 15 இல் நிக்ஸன் டொலருக்கும் தங்கத்திற்குமான சம்பந்தத்தை உடைக்க-நேரிட்டது). ஆனால் இது "முதலும்" கூட. ஏனெனில் அது சுருங்கிக் கொண்டு செல்லும் உபரி மதிப்பில் பங்கு கோருகின்றது. இவ் இரட்டை முரண்பாடு முதலாளித்துவ அமைப்பு முறைக்கெதிராக இன்று திரும்பியுள்ளது.

உலகின் பிரதான நாணயங்களுக்கிடையே-சமத்துவத்தை ஏற்படுத்த தோற்றுவிக்கப்பட்ட சர்வதேச நாணய சபை (IMF) 1970 களில் ஏற்பட்ட எண்ணெய் நெருக்கடியினால் 1971, AUGUST 15 இல் தங்கத்திற்கும் டொலருக்குமான சம்பந்தத்தை உடைத்ததன் மூலம் தனது பிரதான தொழிற்பாட்டை இழந்தது. இன்று தோன்றியுள்ள கடன் பிரச்சனை கொடுக்கும் மீள முடியாத தாக்கத்தினால் IMF தனது அடுத்த தொழிற்பாட்டையும் இழக்கும் கட்டத்தினுள் நுழைந்துள்ளது. அமெரிக்க காங்கிரசானது சர்வதேச நாணய சபைக்கான $ 8.2 மில்லியன் தொகையை செலுத்த இன்று

ம் முடிவு செய்தபாடில்லை. உலக வங்கியின் ஒரு பகுதி
யான சர்வதேச அபிவிருத்தி நிறுவனத் (INTERNAT-
-IONAL DEVOLOPMENT ASSOCITION - IDA) திற்கான
தனது பங்கினை உயர்த்த முடியாதென றேகன் நிர்வா
கம் அறிவித்து விட்டது [IDA என்பது நீண்ட காலத்
தவணையில் குறைந்த வட்டியில் கடன் கொடுக்கும்
அமைப்பாகும்] மூன்றாவது உலக நாடுகளை வாட்டும்
கடுமையான வறுமையிலிருந்து மேலும் கீழே போ-
-காது தடுக்கவாதல் IDA யிற்கு மிகக் குறைந்த-
-பட்சம் $ 16 பில்லியன் தேவையாகும். ஆனால்
அமெரிக்காவானது இத்தொகையை மேலும் $ 9
பில்லியனுக்கு தாழ்த்தவும் தமது பங்கினை செலுத்து-
-வதில் காலதாமதமேற்படுத்தவும் முனைகின்றது
அமெரிக்காவானது தனது பொறுப்பினை நிறைவேற்-
-றத் தவறுகையில் IMF இல் உள்ள 147 நாடுக
ளும் சர்வதேச நாணய சபைக்கான தமது ஆதரவை
விலக்குவது இன்று உறுதியாகி விட்டது.

IMF இன் நிர்வாக டைரக்டரான JAC-
-QUES DE LAROSIERE இதைப்பற்றிக் குறிப்பிடும் -
போது அமெரிக்க காங்கிரசானது தனது பங்கினை
அளிக்க முடிவு செய்யாத பட்சத்தில் பொருளாதார
நிதி, ரீதியில் கணக்கிட முடியாத பின் விளைவுகள்
ஏற்படும் எனச் சுட்டிக் காட்டினர். 1970 களில்
மிலிடரி யுந்தா ஆட்சியுள்ள நாடுகளுக்கு கடன்-
களை வாரியிறைத்து அதீத லாபம் சம்பாதிக்க முனை-
-ந்த பன்னாட்டு வர்த்தக வங்கிகள் இன்று மேற்-
-கொண்டு மூன்றாவது உலக நாடுகளுக்கு கடனைக்
கொடுக்கப் போகாதது மாத்திரமல்ல; அவை தாம்.
ஏற்கனவே கொடுத்த கடனை வட்டியுடன் சேர்-
-த்து அறவிட்டுத்தருமாறு ஆட்சியாளர்களை நெருக்க-

-கத் தொடங்கி விட்டன. இச்சர்வதேச பொருளா-
-தார நெருக்கடி நிலைமையினுள்ளேயே இன்று —
-தமது அதீத லாபத்தினை பெற்றுக்கொள்ள முடியாத
உலக ஏகாதிபத்தியம் மூன்றாவது உலகப் போரி-
-ற்கான நேரடி தயாரிப்பில் ஈடுபட்டுள்ளன.

பிரித்தானியாவில் மட்டும் வேலையற்றோர்
தொகை 4.5 மில்லியனை கடந்து விட்டது. ஜேர்ம-
-னியில் வேலையற்றோர் தொகை 3 மில்லியனாகும்.
ஜேர்மனியில் தொழிலாளியின் சமூகக் காப்புறுதி
தொடர்ச்சியாக வெட்டப்பட்டு வருகின்றது. செ-
-ன்ற வருட கார் காலத்தில் DETROIT இல் சூப்பிற்-
-காக நின்ற கியூ இந்த வருடத்தின் கார் காலத்-
-தில் மீண்டும் உதிப்பது திண்ணம். சர்வதேசத்-
-திலும் எந்த ஒரு நாட்டிலாவது விலைவாசி உயராமல்
இருந்தது கிடையாது. கட்டுக்கடங்காத விலைவாசி-
-யுயர்வுக் கெதிராக தொழிலாள வர்க்கம் போர்க்-
-கொடியுயர்த்தியுள்ளது. இக்காலகட்டத்தில் தொ-
-ழிலாள வர்க்கக்கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்ற-
-மல் போனது அதன் தலைமை நெருக்கடியினாலே-
-யேயாகும்.

ஏகாதிபத்தியம் சரித்திரத்தின் போக்கினை
உணர்ந்து விட்டது. தொழிலாள வர்க்கத்தின் தலை-
-மை நெருக்கடி தீரும் காலத்தில் ஏகாதிபத்தியம்
உருத்தெரியாமல் ஆவது திண்ணமே. ஏகாதிபத்-
-தியத்திற்கெதிரான நடவடிக்கைகள் பல முனைக-
-ளிலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இவையனைத்தையும்
முகம் கொடுக்க உற்பத்தி முறையில் மாற்றம் கொ-
-ண்டு வர சக்தியற்ற ஏகாதிபத்தியம் இன்று தான்
தப்புவதற்கு இராணுவ நடவடிக்கைகளை மேற்-
-கொண்டே தீரும். கடந்த செப்டெம்பரில் பால-

-ஸ்தீன மக்களை நிராயுதபாணிகளாக வைத்தே -
-கொன்று குவித்த ஏகாதிபத்தியம் இன்று மிருகத்-
-தனமாக கிறநடாவை ஆக்கிரமித்து விட்டது. இர-
-ண்டாம் உலகப் போரில் பாவித்த அணுவாயு-
-தங்களைவிட கூடிய அளவில் அழிவாயுதங்களை கொ-
-ண்டு 30 வருடங்களுக்கு மேலாக வியட்நாமிய
மக்களை கொன்று குவித்து அடிமைப்படுத்தி வைத்-
-திருந்த ஏகாதிபத்தியம் இன்று கிறநடாவை நேர-
-டியாக காலனியாதிக்கம் செய்து விட்டது. தென்
கொரியாவிற்கு கடந்த கிழமை விஜயம் செய்த றேகன் வடகொரிய எல்லைக்குப் போய் அமெரிக்க துருப்புகளையும், தென் கொரிய துருப்புகளையும் உசார்படுத்தி யுள்ளார். நிக்கரகுவாப் புரட்சியையும், கியூபாவின் புரட்சியையும், எல்சல்வடோரின் மக்கள் கிளர்ச்சியையும் நசுக்கப் பகீரதப்பிரயத்தனம் எடுத்து வருகின்றது ஏகாதிபத்தியம்.

இந்நிலைமைகளிலேயே சர்வதேச ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்கள் ஏகாதிபத்தியத்தை முகம் கொடுக்க தயாராகி வருகின்றனர். 1983 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7ம் திகதி முதல் 12ம் திகதி வரை இந்தியாவில் புதுடில்லியில் நடைபெற்ற கூட்டுச்சேரா நாடுகளின் ஏழாவது உச்சிமகாநாட்டில் கியூபா குடியரசின் தலைவர் பிடல் காஸ்ட்ரோ இவ்வாறு குறிப்பிட்டார் 'உலகம் இன்று போல் என்றுமே ஒரு போதும் பேரழிவை நெருங்கி இருக்கவில்லை என்பதை நம்மை நம்பச் செய்வது ஒரு கடவுள் சேவையல்ல. அணு ஆயுதத்தின் தன்மையினால் அது நிச்சயமாகத் தெரிகிறது. பசி பிணிதங்கிய நிலைமை, அறிவின்மை, நோய் நொடி ஆகியவை மனித இனத்தில் பல கோடி மக்களை பாதித்துள்ளது.

1979 ஆம் ஆண்டு நாம் கூடியபோது யுத்த அபாயம் ஏற்கனவே இருந்தது. தனது நாட்டின் தனது நாடு

தலைமை தாங்கும் கூட்டணி நாடுகளின் ராணுவ மேலாதிக்கத்தை ஒப்புக்கொள்ள வேண்டும் என்று சமாதானத்திற்கு ஒரு நிபந்தனையை அமெரிக்க நாட்டின் ஜனாதிபதி திணிக்க முடிவு செய்திருப்பதால் யுத்த அபாயம் மேலும் வேகமாக அதிகரித்துள்ளது. ஆறாவது உச்சிமாநாடு நடைபெற்ற நாட்களில் பதட்டத் தணிவுக்கு ஏற்பட்ட அபாயத்திற்கு எதிராக நாம் எல்லாரும் குரல் கொடுத்தோம். இன்று பதட்டத்தணிவுக்கு ஏற்பட்டுள்ள சீர்குலைவு புதிய சர்வதேச அரசியல் நிலைமையில் ஒரு கொடிய அம்சமாக விளங்குகிறது. நாம் ஹவானாவில் நிராகரித்த ஆயுதப்போட்டி இன்று வேகமாக வளர்ந்து வருகிறது. 1982 ஆம் ஆண்டு ராணுவச்செலவு என்றுமில்லாத அளவை எட்டியது. ஐரோப்பாவை ஏவுகணைகளைக்கொண்டு நிரப்பும் அபாயமும் ஒரு பயங்கர உலக நாடகத்தின் தொடக்கமாக அதை ஒரு காட்சி அங்கமாக மாற்றுவதும் புதிய நிலைமையை எட்டியுள்ளது".

அவர் பாலஸ்தீனர்கள் சம்பந்தமாக குறிப்பிடுகையில் " அந்த பாலஸ்தீன துயர சம்பவத்திற்கு கூட்டுச்சேரா நாடுகளின் ஆதரவு மட்டுமல்லாது உலகம் முழுவதும் உள்ள சர்வதேச சமூகத்தின் இதர முக்கிய சக்திகளிடமிருந்தும் கிடைத்த ஆதரவு பாலஸ்தீன விடுதலை ஸ்தாபனம் பிரதிநிதித்துவப்படுத்தும் பாலஸ்தீன மக்கள் லட்சியத்திற்காகவும்; பாலஸ்தீனர்களுக்கு தங்களின் நிலங்களை திரும்பப்பெறுவதற்கான உரிமை, முழு அளவிலான, தனி ஆட்சியை நிறுவதற்கான உரிமை, பாலஸ்தீன மக்களின் உண்மையான ஒரே பிரதிநிதியாக பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை அங்கீகரிப்பது ஆகியவற்றிற்காகவும் கிடைத்த ஆதரவு என்பதை உறுதிப்படுத்துகிறது. இந்த உலகம் தழுவிய கோரிக்கையை-

தேவையான அளவு பலத்துடன் இந்த மாநாடு திரு-
-ம்பவும் உறுதிப்படுத்தும் என்று நான் அறிகிறேன்."
எனக் குறிப்பிட்டார்.

மேலும் பிடல்காஸ்ரோ "லிபியாவிற்கு
எதிரான அமெரிக்க ஆக்கிரமிப்பு அந்த உறுப்பு நா-
-டுகளுக்கு எதிரான அமெரிக்காவின் உண்மையான
யுத்த நடவடிக்கையாகும். இது ஆபிரிக்காவில் ஒரு பு-
-திய அபாய பிராந்தியத்தை உருவாக்கியுள்ளது. நமது
கடுமையான எதிர்ப்பை அது கோருகிறது" என்றார்.

"கியூபாவை தண்டிக்க எந்த விதமான வழி-
-களையும் கையாள இன்றைய அமெரிக்க நிர்வாகம்
முடிவு செய்துள்ளது. அது பகிரங்கமாகவும் அறிவிக்கப்-
-பட்டது."

"கியூபாவை ஏன் தண்டிக்க வேண்டும்? எங்கள்
நாடு எங்களது சாதாரண வளங்களைக் கொண்டு ஆருல்
ஆழ்ந்த சமூக நீதி உணர்வுடன் என்றுமில்லாத
வகையில் ஒரு கௌரவமான மனிதனாக வளர்ந்து
அதன் கல்வி, உடல் நலம் பேணுதல், பண்பாடு, வேலை
நல்வாழ்வு ஆகிய அனைத்து தேவைகளையும் சமாளித்-
ததாலா? புரட்சிகர இயக்கத்திற்கும், மக்களிடையே
ஒருமைப்பாட்டு கோட்பாட்டிற்கும், காலனி ஆதிக்கம்,
நவீன காலனி ஆதிக்கம், பாசிசம், இனவெறி, ஆகியவ-
-ற்றிற்கு எதிராக உறுதியான போராட்டம் நடத்து-
-வதற்கும் கியூபா விசுவாசமாக, பிடிவாதமாக நின்ற-
-தாலா? மூன்றாவது உலக நாடுகளுடன் ஒத்துழை-
-ப்பிற்கு ஓர் உறுதியான கொள்கையை எங்கள் —
நாடு பின்பற்றியதாலா? இதர மக்களின் நியாயமான லட்-
-சியங்களுக்காக ரத்தம் கூட சிந்த எங்கள் நாடு தயாராக-
-க இருப்பதாலா? நாங்கள் விற்பனைக்கு ஆளாகாமல்
போனதாலா? நாங்கள் எங்கள் கோட்பாடுகளுக்கு

துரோகம் செய்யாமல் போனதாலா? நமது காலத்-
-தில் நவீன காட்டுமிராண்டிகளுக்கு என்றுமே தலை-
-வணங்கிச் செல்லாததாலா? கியூபாவை ஏன் தண்டி-
-க்க வேண்டும்.

கியூபா போல கௌரமான எளிய வாழ்க்-
-கை வாழும் ஒரு சிறிய கடின உழைப்பு நாட்டின் முன்
ஏகாதிபத்தியம் வெறுப்பையும் கையாலாகத் தனத்தையும்
காட்டுகிறது. ஓர் உதாரணமாகத் திகழும் நாட்டை
எப்படி கொலை செய்வது? ஓர் தர்ம சக்தியை எப்படி
அழிப்பது? ஏழு அமெரிக்க நிர்வாகங்களின் பகைமை-
-யை ஏற்கனவே எதிர்த்து நிற்கும் ஒரே கொடியை
எப்படி இறக்குவது? என்று திட்டமிடுகிறது.

கியூபாவிற்கு எதிரான அமெரிக்காவின் கொ-
-லைபாதகமான, சட்ட விரோதமான பொருளாதாரத்-
தடைகள் போடப்பட்டு ஏற்கனவே இருபத்துமூன்று
ஆண்டுகள் கடந்து விட்டன. உலகத்திலே இது-
வரை கண்டிராத ஒரு சம்பவமாகும். எங்கள் மக்களை
இழிவுபடுத்தும் ஒரே நோக்கத்தோடு அமெரிக்காவின்
கௌண்டனமோ கப்பற் படை தளம் இன்றும் இருந்-
-து வருகிறது. அமெரிக்காவின் உளவு விமானங்கள்
தொடர்ந்து கியூபாவை சுற்றி பறந்து கொண்டிருக்-
-கின்றன. அப்போது அது எங்களது விண்வெளி இட-
-த்தில் வெட்கமின்றி அத்துமீறி பறக்கின்றது.

இன்னும் மோசமானது என்னவென்றால், கி-
-யூபா தலைவர்கள் குறிப்பாக அதன் அரசாங்கத் தலைவ-
-ர்களைக் கொல்ல திட்டங்கள் தீட்டுமாறு மத்திய
புலனாய்வுத் துறைக்கு (சி.ஐ.ஏ.) அமெரிக்க நிர்வாகம்
குறிப்பாணைகள் கொடுத்திருப்பதாக நம்பத் தகுந்த
வட்டாரங்களிலிருந்து நாங்கள் அறிந்துள்ளோம்.
அத்தகைய மனச்சாட்சியற்ற தனம் கொண்டவர்-

-களிடம் வேறு என்ன எதிர் பார்க்க முடியும்? நல்-
-லதிலேயே நம்பிக்கையில்லாத ஏகாதிபத்திய செய-
-ல்கள் குறித்து ஆச்சரியப்பட என்ன இருக்கிறது?
இதர அமெரிக்க ஜனாதிபதிகளும் கடந்த காலத்தில்
இது போன்ற திட்டங்களை வகுத்தார்கள். பல முறை
அத்திட்டங்களை செயற்படுத்த முயற்சித்தது அமெரிக்-
காவின் செனற் சபையிலேயே உறுதிப்படுத்தப்பட்டு-
-விட்டது. இருப்பினும் எல்லா முயற்சிகளும் பயனற்-
-றுப் போயின. எங்களது புரட்சி மனிதனை நம்பி இ-
-ருக்கவில்லை அது சித்தாந்தத்தின் மீது எழுந்து நிற்-
-கிறது. சித்தாந்தத்தை யாரும் கொன்று விட -
-முடியாது"

தமிழ் ஈழம் உடனடியாக வேண்டும் என்
பதற்காக தமிழ் மக்களின் அரசியல் அறிவையை-
உடனடியாக உயர்த்தாது வெறுமனே ஆயுதம் -
எடுத்துப் போராடுவது மட்டுமேயென்றுள்ள இன்-
-றைய நிலையில் நின்று; பன்னாட்டு முதலாளித்துவத்-
-தின் சர்வ தேச சக்திகள் விளங்கிக் கொண்ட உ-
-லகியலில் மேம்பட்ட ஓர் சமுதாயத்தை பரிணமி-
-க்க வைப்பதன் ஓர் அம்சமாகவே தமிழ் ஈழ-
-விடுதலை சாத்தியமாகும். இன்று புரட்சியேற்பட்டு
கால் நூற்றாண்டை தாண்டாத கியூபாவிற்கு எதி
ரான ஏகாதிபத்தியத்தின் நெருக்குவாரங்களும் -
புரட்சி நடந்து 4 வருடமாகிவிட்ட நிக்கரகுவா-
-விற்கு எதிரான நெருக்குவாரங்களும் மேலும் இந்த-
மட்டத்தில் இருக்கும் போது "தமிழ் ஈழம்" மட்டும்
தனித்தொரு சக்தியாக கெட்டி பற்ற முடியாத-
-தன் புறநிலைக்காரணிகளை வரலாற்று ஓட்டத்துடன்
சார்பு ரீதியாகப் புரிந்து கொள்வோம்.

# கற்பனைத்தமிழன்

கற்பனைத் தமிழன் கதைகள் சொல்வேன்
உண்மைகள் சுட்டால் பொறுத்தருள் வீரே!
இத்தனை அழிவுகள் தொடர்கின்ற போதில்
உண்மையை மறைத்தல் நீதிக்கு தகுமோ!
முன்னர்;
வன்னியசிங்கமும் பொன்னரும் வந்தார்
வனப்பில் பல பல தமிழ்க் கதை சொன்னார்
வீரபாண்டிய கதைகளைக் கேட்டான் - இவன்
வீட்டில் சோறில்லா நிலையிலும் கூட

நாட்டான் அரசியல் தலைவர்கள் சொன்ன
தமிழொடு சிங்களம் இனித்திடக் கேட்டான்
தாய் நாடு மீட்கும் கதைகளைக் கேட்டான்
தான் மட்டும் அரசியல் பூச்சியமானான்.
பின்னர்;
அகிம்சை என்பது விடுதலைக் கிம்சை
ஆயுதப் புரட்சியே எம் போராட்டம்
ஆட்சிக்கு வந்ததும் சோஷலிசம் சமைப்போம்
ஆகவே தத்துவம் இப்போ எதற்கு

கம்யூனிசம் வந்தால் நாடது கெட்டிடும்
கடவுள் இல்லாக் கம்யூனிசம் வேண்டாம்
சோஷலிசத் தமிழீழம் சொந்தத்தில் வேண்டும்
சொன்னதைச் சொன்னான் பைங்கிளி தோற்க.

நேற்றைய வரையில் கம்யூனிசம் பூதம்
இன்றைய போதம் மாக்சிய லெனினிசம்
மாக்சியம் வேறு கொமினிசம் வேறு
சோஷலிசம் என்பது ததிங்கிண தோம் திமி தோம்

இப்படிப்பட்ட முற்போக்குத் தமிழன்
இதுவும் சொல்வான் இன்னமுஞ் சொல்வான்
இரண்டு வருடம் பொறுத்திரு இந்தா
"ஓட்டமற்றிக்" சோஷலிசம் நடக்கப்படு தென்பான்

கடலின் ஆழம் முழங்கால் என்றான்
காற்றினைத் திரிப்பேன் கயிறாய் என்றான்
மயிரைக்கட்டி மலையை இழுத்தான் - அந்த
மலையைக்கூட மணற் தம்பிலெடுத்தான்

பொருள் முதல் வாதம் புரியவும் வேண்டாம்
பொருளியல் பற்றிய அறிவும் வேண்டாம்
SMG யும் AK7 உம்
எம் தமிழ் மறவன் தாரக மந்திரம்

கற்பனைத் தமிழன் மீண்டும் பிறப்பான்
பிற்போக்குச் சேற்றில் மூழ்கி எழுந்து
தனிநபர் பயங்கர வாராரோ பாடி
தனக்கு நிக ரவனியில் "ஆரென்று கேட்பான்

கருத்து முதல் வாதம் புரிகின்ற தமிழா!
கான்சரில் கொடியது கற்பனை வியாதி
கற்பனை செய்தே நீ இருப்பது நியதி
பொருளியல், தத்துவம் அனைத்தையும் மறந்தால்

பிற்போக்குத் தமிழன் கற்பனைத்தமிழன்
தலைவர் சொன்னால் தட்டாது கேட்பான்
உட்பொருள் உண்மை உணர்ந்தித் தெளியான்
எப்படி யுரைப்போம் எம்மவர் நிலையை.

மேலும்மேலும் கூடுதலான வேகத்தில் ஒன்றுக்குப் பதில் ஒன்ருய் வந்து கொண்டிருக்கும் இந்தக் கண்டுபிடிப்புகளும் சாதனைகளும், இதன்முன் கண்டும் கேட்டுமிராத அளவுக்கு நாளுக்கு நாள் உயர்ந்து செல்லும் இந்த மனித உழைப்பின் உற்பத்தித் திறன், இறுதியில் ஒரு மோதலை உண்டாக்குகிறது; இன்றைய முதலாளித்துவப் பொருளாதாரம் மடிந்தொழியப் போகும் ஒரு மோதலை உண்டாக்குகிறது. ஒரு புறத்தில் அளவிட முடியாத செல்வங்களும், வாங்குவோரால் சமாளிக்க முடியாதபடி அபரிமிதமாய் அளவு கடந்துவிட்ட பொருள்களும் குவிய, மறு புறத்தில் சமுதாயத்தின் மிகப் பெரும் பகுதியோர் பாட்டாளிகளாக்கப் பட்டு கூலித் தொழிலாளர்களாய் மாற்றப்படுகின்றனர்; இக்காரணத்தால் இந்த அளவு கடந்த அபரிமிதப் பொருள்களைத் தமது உடைமையாக்கிக் கொள்ளும் வகையற்ருேராக்கப்படுகின்றனர். அளவுமீறிய செல்வமுடைத்த ஒரு சிறு வர்க்கமாகவும், சொத்தில்லாத கூலித்தொழிலாளர்களது பெரிய வர்க்கமாகவும் சமுதாயம் பிளவுறுவதால், அது மிகப் பெருவாரியான உறுப்பினர்கள் மிகக் கொடிய இல்லாமையிலிருந்து சொற்ப அளவுக்கே காப்பு பெற, அல்லது சிறிதும் காப்பில்லாதோராய் இருக்க, தனது அளவு கடந்த அபரிமிதத்தாலேயே நெரித்துத் திணறடிக்கப்படும் ஒரு சமுதாயமாகிவிடுகிறது. இப்படிப்பட்ட நிலை நாள்தோறும் மேலும் மேலும் அபத்தமாகியும் அதேபோதில் மேலும் மேலும் தேவையற்றதாகியும் வருகிறது. இந்த நிலை ஒழிக்கப்பட்டு ஆக வேண்டும், இது ஒழிக்கப்படவும் முடியும்.

பெற்றுக்கொள்ளவேண்டிய முகவரி

NEW CENTURY BOOK HOUSE
No: 6 NALLATHAMBY
CHETTY STREET
MADRAS / INDIA.





தற்போது நடைபெறும் வர்க்கப் போராட்டங்களுக்கும் தேசியப் போராட்டங்களுக்கும் பொருளாயத அடிப்படையாய் இருக்கும் **பொருளாதார உறவுகளை** எடுத்துரைப்பதாகும்.

– மார்க்ஸ் –

"We are living in risky and difficult times. The threat of confrontation is not only local, it is worldwide. we need nerves of steel, The greatest strength, The greatest mobilization of the peoples and an absolute determination not to yield to blackmail, if we are to stop the aggression, if we are to safeguard peace, if we are to survive."

"MANKIND SHOULD LAST, AND IF WE ARE DETERMINED, CONSCIOUS AND BRAVE, IT WILL LAST."



**FIDEL CASTRO**

# THE DIE HARD ANTI IMPERIALIST